வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 30.06.2022 வியாழக்கிழமை | இதழ் : 206 | பக்கங்கள் : 16




## இலங்கையில் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டோரை

# சர்வதேச நீதிமன்றில் பாரப்படுத்த ஐக்கிய நாடுகள் சபை ஆதரிக்காது!

### பிரித்தானியாவின் வெளிவிவகார இணை அமைச்சர்



லண்டன், ஜூன் 30

இலங்கையில் மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் (ஐ. சி. சி.) முற்படுத்துவதற்கான பரிந்துரைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையிடமிருந்து தேவையான ஆதரவு கிடைக்காது.

- இவ்வாறு மதிப்பிட்டுள்ளதாக பிரித்தானியாவின் பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் மற்றும் வெளிநாட்டு இணை அமைச்சர் விக்கி போர்ட் தெரிவித்துள்ளார்.

15

## ஜூலை 22 வரை பெற்றோல் வராது

கொழும்பு, ஜூன். 30

அடுத்த மாதம் 22 ஆம் திகதி வரை பெற்றோல் பெற்றுக்கொள்ள முடியாது என பிரதமரின் தலைமை அதிகாரி சாகல ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் நிதி இருந்தாலும், எரிபொருள் இறக்குமதிக்கு அணுக முடியாது என அவர் மேலும்

15

## யாழ்ப்பாணத்தில் விரைவில் கடவுச்சீட்டுப் பணிமனை!

### சொந்த நிதியில் அமைக்கிறார் தம்மிக

கொழும்பு, ஜூன் 30

யாழ்ப்பாணத்தில் கடவுச் சீட்டு வழங்கும் கிளை பணிமனையை தனது சொந்த நிதியில் அமைத்து திறக்கவுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேசமயம், கடவுச் சீட்டு வழங்

15

## ஜப்பான் தொழில் வாய்ப்பு குறித்து வடக்கில் விழிப்புணர்வு அவசியம்!


### யாழ். வந்த தூதுவரிடம் எடுத்துரைப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 30

தொழில் வாய்ப்புகளுக்காக ஜப்பானுக்கு இளைஞர்கள் செல்வதற்கு ஏற்றவிதத்தில் வடக்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்று தம்மை சந்தித்த அந்நாட்டு தூதுவரிடம் கேட்டுள்ளார்

15



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசனி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானவேளை...! படங்கள்: ஐ. சிவசாந்தன்

## ரயில் சேவை நேற்று பாதிப்பு

கொழும்பு, ஜூன் 30

நேற்றைய தினம் கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு காலை 6.05 மணிக்கு புறப்பட வேண்டிய யாழ்தேவி, 6.35 மணிக்கு மட்டக்களப்புக்கு புறப்பட வேண்டிய உதயதேவி ரயில் சேவைகள் உட்பட 24 ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன.

எரிபொருள் இன்மையால் புகையிரதத் திணைக்கள ஊழியர்கள் தமது பணியிடங்களுக்கு செல்ல முடியாமையாலேயே இந்த சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன என்று திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

அத்துடன், வரும் நாட்களில் மேலும் பல ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படலாம் என்றும் அவர் கூறினார்.

15

## கந்தகாடு புனர்வாழ்வு முகாமிலிருந்து 600 பேர் வரையானோர் தப்பியோட்டம்

### மோதலில் ஒருவர் மரணம்!

கொழும்பு, ஜூன் 30

பொலநறுவை - வெலிகந்தை - கந்தகாடு போதைபொருள் பாவனையிலிருந்து புனர்வாழ்வளிக்கும் முகாமிலிருந்து 600 பேர் வரை தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ள. அத்துடன், அவர்களிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்தார் என்றும் கூறப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு, ஒருவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் உயிரிழந்தார்.

அதுதொடக்கம் புனர்வாழ்வு பெறும் சுமார் ஆயிரம் பேர் முகாமுக்குள் கலவரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை 8

15

## பத்திரிகை விநியோகிக்க ஆட்கள் தேவை!

ஈழநாடு நாளிதழ்களை யாழ்ப்பாணம் நகரிலிருந்து சைக்கிள் மூலம் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை.

**யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குள், யாழ்ப்பாணம் - பருத்தித்துறை (பருத்தித்துறை வீதி) யாழ்ப்பாணம் - கொடிகாமம் (ஏ-9 வீதி), யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் (பலாலி வீதி) , யாழ்ப்பாணம் - மாவிட்டபுரம் (கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் - மானிப்பாய் - சங்கானை - காரைநகர்.**

**சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்**

தொடர்புகளுக்கு:-
077 311 9298, 075 313 2805

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு நண்பர் காணொலிப் பதிவு ஒன்றை அனுப்பியிருந்தார். அதில், பாடசாலை செல்லும் மாணவர்கள் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து ஒன்றில் தொங்கிக்கொண்டு செல்கின்ற காட்சி பதிவாகியிருந்தது.

இதில் என்ன விசேசம் இருக்கின்றது? தெற்கில் செல்லும் புகையிரதங்களில் கூட பயணிகள் அவ்வாறு தொங்கிக்கொண்டு செல்வதைப் பார்த்திருக்கிறோம்தானே என்று யோசித்தேன்.

திரும்பவும் அப்படி என்ன இருக்கின்றது என்று பார்த்தபோதுதான் அங்கே பேருந்து வண்டியின் பின்பகுதியில் பயணிகளின் பொதிகள் வைப்பதற்கான பகுதியிலும் சில மாணவர்கள் ஏறி உள்ளே குந்தி இருந்து பயணிப்பது தெரிந்தது.

தரிப்பிடங்களில் பேருந்து நிற்கும்போது அதன் கதவைத் திறந்து காற்றை வாங்கிக்கொண்டு, அது ஓடத் தொடங்கும்போது கதவை இழுத்து மூடிக்கொள்கின்றனர் அந்த மாணவர்கள்.

இத்தனை ஆபத்தான பணயம் என்றபோதிலும் அவர்கள் அதனைவிட தமது கல்வி முக்கியம் என்று கருதுவது தெரிந்தது. மொனராகலைக்கும் மாத்தறைக்குமான பேருந்து அது. அப்போதுதான், வடக்கின் அல்லது தமிழர்களின் கடந்த காலங்கள் மனதில் திரைப்படமாக வந்துபோயின.ஒரு காலத்தில் யாழ்ப்பாண நகரத்தில் மாத்திரமல்ல, கிராமங்களிலும்கூட ஒவ்வொரு கிராமத்திற்கும் குறைந்தது ஒரு ரியூட்டரியாவது இருக்கும். வகுப்பு முடிகின்றபோது நூற்றுக்கணக்கான மாணவர்கள் துவிச்சக்கரவண்டிகளை எடுத்துக்கொண்டு டியூட்டரிகளிலிருந்து வெளியேறும்போது அந்தப் பகுதிகளில் வேறு வாகனங்களே செல்லமுடியாத நிலை ஏற்படும் ஆசிரியர்களும் அதே போல, தமது மாணவர்களோடு துவிச்சக்கரவண்டிகளில் பயணித்தே கற்பித்தனர். ஆசிரியர்கள், அறிவூட்டிகளாக மட்டுமன்றி, நற்சமூகத்திற்கான நல்ல வழிகாட்டிகளாகவும் அன்று இருந்தனர். அத்தகைய அர்ப்பண வாழ்க்கையே குருமார்களுக்கான மரியாதையை அன்று தேடித்தந்தது. அந்த அளவுக்கு, இருக்கிற வசதிகளை மட்டும் வைத்துக்கொண்டு கற்றலையும் கற்பித்தலையும் அன்றைய சமூகம் செய்தது. பாடசாலைக்குச் செல்ல பெற்றோல் இல்லை என்றும், போக்குவரத்து பிரச்னை என்றும் காரணங்கள் சொல்லிவிட்டு ஆசிரியர்கள் அன்று போராட்டங்கள் நடத்தியது இல்லை.

ஆனால், இப்போது ஓர் ஆரம்ப பாடசாலையின் முன்னால் உள்ள வீதியில் பாடசாலை தொடங்கும்போதோ அல்லது முடியும்போதோ ஏற்படுகின்ற வாகன நெரிசல் என்பது சினத்தை ஏற்படுத்துகின்றது. பிள்ளைகளை ஏற்றிச் செல்ல வரும் வாகனங்கள் வீதியின் இரு பக்கங்களையும் ஆக்கிரமித்திருக்கும். மோட்டார் சைக்கிள்களில் பெற்றோர்கள் காத்திருப்பார்கள். ஆனால், அந்தப் பள்ளிக்கூடத்தில் தங்கள் பிள்ளைகளுக்கு முதலாம் வகுப்பில் அனுமதி எடுக்கும்போது, பாடசாலையின் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் வசிப்பதாக நிரூபிப்பவர்கள், பிள்ளைகளை வாகனத்தில் தான் கொண்டுவந்து விடவேண்டுமா என்று கேட்காமல் இருக்கவும் முடியவில்லை.இது வேறு விடயம். ஆனால், இங்கே சொல்ல வருவது. நமது சைக்கிள் பயணம் பற்றியது.

முன்னரும் இந்தப் பத்தியில், யாழ்ப்பாணத்தின் “லாண்ட் மார்க்“ என்பது பெண்கள், மாணவிகள் துவிச்சக்கரவண்டிகள் ஓடுகின்ற காட்சியும்தான் என்று குறிப்பிட்டிருந்தேன்.

தெற்கில் மாணவர்கள் அத்தனை சிரமங்களுடனும் தமது கல்வியைத் தொடர முயல்வதைப் பார்த்த பின்னர் - கல்வியே நமது சொத்து என்று வாழ்ந்த ஒரு சமூகத்திலிருந்து வந்தவர்கள், தமது அடுத்த சந்ததிக்காக அவர்களின் கல்விக்கான எந்தத் தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கவேண்டியவர்கள் - எரிபொருள் கேட்டு போராட்டம் நடத்துவதை அறிகின்றபோது கவலைதான் எஞ்சுகின்றது.

முன்னைய சந்ததிகளின் காலத்தில், கல்விப் பணியைத் தெய்வீகப் பணியாக ஏற்று தியாக சேவை புரிந்த ஆசிரியர்களே இருந்தார்கள். பேருந்து கிடைக்கவில்லையெனில் துவிச்சக்கர வண்டிகளிலும், அதுவும் இல்லையெனின் கால்நடையாகவும் பாடசாலைக்குச் சென்று கற்பித்தவர்கள் அவர்கள். அப்படியானவர்கள் இப்போது மிகக் குறைவு.

இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருந்தபோது, அலுவலகம் வந்த நண்பர் ஒருவர் அறைக்குள்ளே வருகின்றபோதே ஏதோ முணுமுணுத்துக்கொண்டு வந்தார். காலையிலேயே சினத்துடன் வருகின்றீர்களே என்று கேட்டேன்.

“காலையில் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு, பாடசாலை போனால், எனது மகனின் வகுப்பு இன்று நடக்காது என்று அவனின் வகுப்பு ரீச்சரே சொல்லி திருப்பி அனுப்பினார். “ஏன் ரீச்சர் நீங்கள் வந்திருக்கிறீர்கள்தானே, வகுப்பை நடத்தலாமே?“ என்று கேட்டதற்கு, “இல்லை, இல்லை, நான் எனது தனிப்பட்ட விடயமாகத்தான் இன்று வந்தேன்“ என்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் ஏறி செல்கின்றார். தனது தனிப்பட்ட விடயமாக பாடசாலைக்கு வர அவரிடம் பெற்றோல் இருந்திருக்கிறது? படிப்பிக்க வாங்கோ என்றால்தான் எரிபொருள் பிரச்னையோ?!“ என்றார் நண்பர்.

எமது பிள்ளைகளின் கல்வியை கொரோனா பெருந்தொற்று இரண்டு வருடங்கள் காவுகொண்டது. அந்தக் காலத்தில் இந்த ஆசிரியர்கள் போக்குவரத்துச் செலவு இல்லாமல் வீடுகளிலேயே இருந்தார்கள். சம்பள உயர்வு கேட்டு இணைய வகுப்புகளைக் கூட நடத்தாமல் தொழிற்சங்கப் போராட்டம் நடத்தியவர்களும் உண்டு. இப்போது எரிபொருள் தட்டுப்பாட்டை காரணம் காட்டி வீட்டிலேயே இருக்கப் பார்க்கின்றார்கள்.

தனியார் துறையில் அனேகமாக நடப்பதுபோல, வேலைக்கு வந்தால்தான் இனி சம்பளம் வழங்கப்படும், அல்லது சம்பளமற்ற விடுமுறையாக கருதப்படும் என்று அறிவித்தால், அரச பணியாளர்கள் துவிச்சக்கரவண்டிகளைத் தூசுதட்டுவார்களோ என்னவோ?!

**- ஊர்க்குருவி**

# நல்லூர் ஆலய பெருந்திருவிழா வழமைபோன்று நடைபெறும்!

## யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று புதன்கிழமை யாழ் மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையில் இடம்பெற்றது.

ஈஸ்டர் குண்டு வெடிப்பு மற்றும் கொரோனா தொற்று காரணமாக கடந்த மூன்று வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்ற நல்லூர் பெருந்திருவிழா வழமைபோன்று அதாவது 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு எவ்வாறு உற்சவம் நடந்ததோ அதேபோல இம்முறை இடம்பெறுமென யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவித்தார்.

கலந்துரையாடலுக்கு பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையாலே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

ஓகஸ்ட் 1ஆம் திகதி காலையில் இருந்து நல்லூர் ஆலய சுற்றுவீதிகளில் போக்குவரத்து தடை செய்யப்பட்டு ஆகஸ்ட் 29 ஆம் திகதி வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்துவிடப்படும். ஆலய வெளி வீதியைச் சூழ ஆலய நிர்வாகத்தினரால் சிவப்பு, வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் மாநகர சபையின் நீர் விநியோக வண்டி மற்றும் கழிவகற்றும் வண்டியை தவிர எக்காரணம் கொண்டும் வாகனங்கள் உட் செல்ல முடியாது. அதேபோல வெள்ளை வர்ணக் கொடிகளால் எல்லையிடப்படும் வீதித்தடை பகுதிகளினுள் எந்தவிதமான வியாபார நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாது. ட்ரோன் கமராக்களை பயன்படுத்தி காணொளி பதிவுசெய்ய முடியாது.

காலணிகளுடன் ஆலய வளாகத்திற்குள் பிரவேசிக்க முடியாது. ஆலயத்துக்கு நேர்த்திக்கடன்களைக் கழிப்பதற்காக வருகின்ற தூக்குகாவடிகள் அனைத்தும் ஆலயத்தின் முன்பக்க பருத்தித்துறை வீதி வழியாக மட்டுமே உள்நுழைய முடியும். அவ்வாறு வருகின்ற காவடிகள் இறக்கப்பட்டதும், வாகனங்கள் அனைத்தும், செட்டித்தெரு வீதி வழியாக வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ் மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ் நகரை அடைய முடியும். ஆனால் இரதோற்சவம் மற்றும் சப்பைரதத் திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

சுகாதார கட்டுப்பாடுகள் இம்முறை திருவிழாவின் போது காணப்படாது. ஆனாலும் ஒவ்வொரு தனி மனிதனும் தங்களது சுகாதாரத்தில் கவனம் எடுத்து செயல்பட வேண்டும் இவை தவிர எதிர்வரும் காலங்களில் தேவைப்படும்போது கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுவோம் என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர், மாநகர பிரதி முதல்வர், நல்லூர் ஆலய பரிபாலகரின் பிரதிநிதிகள், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ)

# மோட்டார் வாகன திணைக்களம் வாரத்தில் இரு நாட்கள் மூடப்படும்!

கொழும்பு, ஜூன் 30

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வேரஹெர சாரதி அனுமதிப்பத்திர அலுவலகம் மற்றும் கம்பஹா மற்றும் அநுராதபுரம் மாவட்ட அலுவலகங்கள் வியாழக்கிழமைகளில் திறந்திருக்கும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான இணையவழி முன்பதிவு செய்தவர்களுக்காக மட்டும் இந்த அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# சேமித்துவைத்த பெற்றோல் பெண்ணுக்கு எமனானது!

திருகோணமலை, ஜூன் 30

திருகோணமலை, அன்பு வெளிபுரத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் 47 வயதான பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் தனது வீட்டின் சுவாமி அறையில் நேற்றுக் காலையில் விளக்கேற்றி விட்டு வீசிய தீக்குச்சியின் தீ மூலமாக, சேமித்து வைக்கப்பட்டிருந்த பெற்றோல் கொள்கலனில் தீ பற்றியதே இந்த விபத்துக்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து குறித்த சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலம் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் பெருந்திருவிழா ஆரம்பமானது!

முல்லைத்தீவு, ஜூன் 30

ஈழத்தின் புராதன சிவ ஆலயங்களில் ஒன்றான ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து ஆலயத்தின் சிறப்பு உற்சவங்களாக 10 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 11ஆம் திகதி சப்பைரதத் திருவிழாவும், 12ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் 13ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

வட மாகாணத்தின் வன்னி பெருநிலப்பரப்பில் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள சுயம்பு லிங்கேஸ்வரர் ஆலயம் வரலாற்று பிரசித்தி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன் 30

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் - உடுப்பிட்டி பண்டைகைப் பிள்ளையார் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ கு .சேவற்கொடியோன் கோயிலின் பிரதம குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.06.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆனி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# செயலே தேவை - அறிக்கைகள் அல்ல?

இன்றைய நெருக்கடி நிலையை - இறைவன் ஈர்த்த வரப்பிரசாதமாத கவே தான் கருதுவதாக யாழ். பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான, சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருக் கின்றார். அரசாங்கத்தை குறை கூறிக் கொண்டிருக்காமல் தற்போதைய சவால்களை எவ்வாறு முறியடிக்கலாமென்று சிந்திக்க வேண்டுமென்று அவர் ஆலோசனை வழங்கியிருக்கின்றார்.

வட, கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இன்றுவரையில், தமிழர் தாயகத்தின் பொருளா தார நிலைமை தொடர்பில் கூட்டறிக்கையொன்றை வெளியிடவில்லை. ஆகக் குறைந்தது, வட, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொண்டுவரும் பிரத்தியேக பிரச்னைகள் தொடர்பில் தங்களுக்குள் சந்திப்புக்களைக்கூட மேற்கொள்ளவில்லை. இது தொடர்பில் ‘ஈழநாடு’ ஏற்கனவே சுட்டிக்காட்டி யிருக்கின்றது.

இப்போது தேவை அறிக்கைகள் அல்ல, தேவை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளாகும். மக்களுக்கு ஆலோசனை கூறுவது இலகுவான தொரு விடயம். எவர் வேண்டுமானாலும் அதை செய்யலாம். இதற்கு அரசி யல்வாதிகள் தேவையில்லை. இப்போது மக்களுக்கு தேவை வழிகாட்டு வதற்கான தலைவர்களே. ஒரு நெருக்கடி ஏற்படும்போது மக்கள் இயல் பாகவே சோர்வடைந்துவிடுவர். அதுவரை, சமூகம் கடைப்பிடித்துவரும் ஒழுங்குகள் பல சீர்குலைந்துவிடும். பஞ்சம் தலைவிரித்தாடும்போது, சமூ கத்தின் கண்ணியம், ஒழுங்கு அனைத்தும் காற்றில் பறந்துவிடும். இதற்கு உலகில் உதாரணங்கள் உண்டு.

இது பொதுவானது. அவ்வாறான சூழலில், மக்களின் பிரச்னைகளை போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதே, மக்களை பிரதிநிதித்தும் செய்யும் தலைவர்கள் என்போரின் பணியாகும். வீட்டுத் தோட்டங்கள் செய்யுங்கள், எரிபொருளை சிக்கனமாக பயன்படுத் துங்கள். இதனை சொல்வதற்கு ஒரு கோவில் பூசாரி போதுமானவராவார். தன்னார்வ குழுக்கள் பலவும் இன்று வீட்டுத் தோட்டங்கள் தொடர்பில் பேசி வருகின்றன. இதனையே அரசியல் தலைவர்கள் என்போரும் கூறவேண் டியதில்லை.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில், அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தவிர, தமிழர் தரப்புக்கள் எதனையும் இதுவரையில் மேற்கொள்ளவில்லை. இனப்பிரச்னையை தீர்த்தால், இந்த பிரச்னையை தீர்க்கலாம் என்னும் வாய்ப்பாட்டையே, தமிழ் அரசியல் கட்சிகள் உச்சரித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், சிங்கள அரசியல் வாதிகளை பொறுத்தவரையில் ஒரு பகுதியினர் ராஜபக்ஷ அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவத்தினாலும், அவர்களின் குடும்ப ஊழல்களி னாலும்தான், இவ்வாறானதொரு நெருக்கடியேற்பட்டதாகக் கூறுகின்றனர். அவர்களே, ராஜபக்ஷக்களை வெளியேறுமாறு கூறிவருகின்றனர். இன்னொரு சிங்கள பிரிவினரோ, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் கொரோனா பெருந்தொற்றின் காரணமாகவே இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டதாக வாதிட முயற்சிக்கின்றனர். எவருமே தமிழ் மக் களின் பிரச்னையை தீர்க்காமையால்தான், இவ்வாறானதொரு நெருக் கடியேற்பட்டதாக நோக்கவில்லை. ஆகக் குறைந்தது இது பற்றி அவர்களிடம் சிறிதளவில்கூட உரையாடல்கள் இடம்பெறவில்லை. 2015இல் ஏற்பட்டது போன்று, தேர்தலில் தமிழர்களின் ஆதரவும் தேவையென்று கருதும் சஜித் பிரேமதாஸ, சுமந்திரனை சந்தித்துக் கொள்கின்றார். பிரதான எதிர்க்கட்சி களோடு இணைந்து ஆட்சியை மாற்ற வேண்டுமென்னும் முன்னைய நிலைப்பாட்டையே கூட்டமைப்பினர் வெளிப்படுத்தி வருகின்றனர்.

முன்னரைப் போன்றே, இப்போதும் எந்தவொரு தமிழ் வேலைத்திட்டமும் தமிழ்த் தேசியவாதிகள் என்போரிடம் இல்லை. வழமைபோல் பாராளு மன்றத்தில் பேசுதல், வழமைபோல் அறிக்கைகளை வெளியிடுதல், வழமை போல் தென்னிலங்கையிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகங்களில் அரட்டை யடித்தல், வழமைபோல் புலம்பெயர்ந்தவர்களின் அழைப்பில் மேற்கு நாடு களுக்கு சென்று அரட்டையடித்தல் - இவற்றைத் தவிர, வேறு எந்தவோர் ஆக்கபூர்வமான செயல்பாடுகளும் தமிழ் தேசிய தரப்புக்களிடம் இல்லை. நிலைமை இப்படித்தான் தொடரப் போகின்றதென்றால், தமிழர்கள் எவ்வாறு தன்னிறைவு பெறமுடியும்?

# பாராளுமன்ற உறுப்பினர்களை ‘கொலை வெறியோடு’ பார்க்கும் மக்கள்!

**அலசுவது இராஜதந்திரி**

இலங்கையின் இன்றைய நிலவரம் எவ்வாறு இருக்கின்றது என்பதற்கு பாராளு மன்ற சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த் தன ஊடகவியலாளர் சிலரிடம் கூறியுள்ள கருத்தே நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின் றது.

நாட்டு நிலவரம் தொடர்பாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் ஊடக வியலாளர்கள் சிலர் கேள்வி எழுப்பியபோதே “நாட்டு மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் களை கொலை செய்யவே விரும்பு கின்றனர்“ என்று அவர் தெரிவித்துள்ளார்.



ஏற்கனவே, ஆளுங்கட்சி உறுப்பினரான அமரகீர்த்தி அத்துகோரள கடந்த மாதம் நாட்டில் பொருளாதார பிரச்னை பூதாகர மாக வெடித்தபோது வீதியில் பொது மக்களால் இடைமறிக்கப்பட்டு நையப் புடைக்கப்பட்ட நிலையில் கொல்லப்பட்டார்.

இதுதவிர, நாட்டின் தென்பகுதியில் கடந்த மாதம் 9ஆம் திகதி காலிமுகத்திடலில் அமைந்துள்ள “கோட்டா கோ கம” ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்க முற்பட்ட போது வெடித்த வன்முறையையடுத்து எழுபது (70) பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் அடித்து நொறுக்கப்பட்டு சேதமாக் கப்பட்டன. அத்துடன் அவர்களின் ஆடம்பர வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டிருந் தன.

ஆளும் கட்சி உறுப்பினர்களின் வீடு வாசல்களே சேதமாக்கப்பட்டிருந்தன. பிரத மராக இருந்த மகிந்த ராஜபக்ஷவின் பூர்வீக இல்லமும் அம்பாந்தோட்டையில் சேதமாக் கப்பட்டுள்ளதுடன் தமிழீழ விடுதலைப் புலிகளை வெற்றி கண்டபின்னர் மார்தட்டித் திரிந்த மகிந்த ராஜபக்ஷ திருகோணமலைக் குச் சென்று ஒளிந்து கொள்ள வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்தார். அவரது சகோ தரரும் நிதி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ வின் இல்லமும் ஆத்திரமடைந்த மக்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருந்தது.

வன்முறையாக வெளிப்பட்ட மக்களின் ஆத்திரம் தற்சமயம் நீறு பூத்த நெருப்பாக இருப்பதையே சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை சுட்டிக்காட்டு கின்றது.

இலங்கையில் தற்சமயம் பொருளாதர நெருக்கடி நாளுக்குநாள் மோசமடைந்து வரு வதையடுத்து கொலை, கொள்ளை போன்ற சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

இந்த வன்முறைச் சம்பவங்களில் பெரிதும் இலக்கு வைக்கப்பட்டவர்களாக ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஆளும் கட்சியின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் ஆகியோரே விளங்குகின்றனர்.

பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்ற பிரதிநிதிகளில் அநேகர் கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் சித்தியடையாதவர்க ளாக இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அவர்களில் பலர் பலதரப்பட்ட குற்றவியல் சம்பவங்களோடு தொடர்புபட்டவர்களாகவும் வழக்கு விசார ணைகளை எதிர் நோக்கியவர்களாகவும் இருக்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நாட்டில் அறிமுகமானதை யடுத்து அந்த ஆட்சி முறையை பலப்படுத்தும் விதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்ஷகையும் அதிகரிக்கப் பட்டது. அச்சமயம் ஒருவர் பாராளு மன்ற உறுப்பி ராக தெரிவா வதற்குரிய அடிப் படைத் தகைமைகள்கூட புறக் கணிக்கப்பட்டிருந்தன.

இதன்காரணமாக கசாப்பு கடை உரிமை யாளர்கள் மற்றும் மதுபான சாலை உரிமை யாளர்கள், மாணிக்கக்கல் வியாபாரிகள், அரசியல் செல்வாக்குடன் நட்டாமுட்டித் தனத்தில் ஈடுபட்ட பேர்வழிகள் என்போர் தமது பணச்செல்வாக்கு , அரசியல் செல்வாக்கு, அடாவடித்தனம் என்பவற்றின் மூலம் பாராளுமன்றினுள் பிரவேசித்துள் ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த யாப்பா அபேவர்த்தன மேலும் கருத்து வெளியிட்ட போது தமது பதவிக்காலத்தில் இதுவரை பதினான்கு (14) பாராளுமன்ற உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.


இதன்மூலம் பாராளுமன்ற உறுப்பினர் களாக தெரிவாவோர் தாம் சார்ந்த மக்களை மிகவும் கண்ணியமாகப் பிரதிநிதித்துவம் செய்வோராக இருப்பதற்கு பதிலாக சட்டம் ஒழுங்கை மீறியோராக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

தென்னிலங்கையில் மட்டுமல்ல. வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களும் பலதரப்பட்ட விமர்சனங்களுக்கு உள்ளான வர்களாகவே இருக்கின்றனர்.

கடந்த மாதம் இடம்பெற்ற வன்முறை யோடு பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேரடியாகவே தொடர்பு பட்டிருந்தார். அவரே அரச தரப்பு வன்முறை யாளர்களை தூண்டிவிடும் விதத்தில் செயல் பட்டிருந்தார். தற்சமயம் கைதாகி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இத்தகைய பின்னணியில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன குறிப்பிட்டது போல பாராளுமன்ற உறுப்பினர்களை கொலை வெறியோடு நாட்டு மக்கள் நோக்கு கின்றனர் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாதென்றே கருதலாம். •

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
செயலில் வெற்றி அடைவீர்கள். நண்பர்களின் உதவியால் நினைத்ததை சாதிப்பீர்கள். அரசு வழியிலான முயற்சிகள் நிறைவேறும். பண வரவில் இருந்த தடைகள் விலகும்.

**இடபம்**
வங்கிப் பணியாளர்கள் பண விவகாரத்தில் கவனமுடன் செயல்பட வேண்டும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நிதி நிலை சீராகும்.

**மிதுனம்**
செயலில் தடுமாற்றம் ஏற்படும். வேறு சிந்தனைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். முயற்சியை நிறைவேற்ற முடியாமல் சங்கடப்படுவீர்கள். நிதானத்துடன் செயல்படுங்கள்.

**கடகம்**
குடும்பத்தின் தேவைக்காக அசையும் பொருட்களை விற்பனை செய்து சமாளிப்பீர்கள். புதிய முயற்சிகள் பலன் தராமல் போகும். வழக்கமான செயல்களிலும் நிதானம் தேவை.

**சிம்மம்**
புதிய முயற்சி லாபம் அளிக்கும். தொழிலை விரிவு செய்வீர்கள். அந்நியரின் வழியே ஆதாயம் காண்பீர்கள். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். திட்டமிட்ட முயற்சிகள் சாதகமாகும்.

**கன்னி**
எதிர்பார்த்த ஆதாயம் ஏற்படும். அரசு வழியிலான முயற்சிகள் சாதகமாகும். உத்தியோகத்தில் இருந்த பிரச்னைகள் சரியாகும். மேலதிகாரியின் ஆதரவு உண்டாகும்.

**துலாம்**
நினைத்ததை சாதிப்பீர்கள். மனக்குழப்பம் அதிகரிக்கும். முயற்சிகளில் இழுபறியும் தாமதமும் ஏற்படும். முயற்சி களை நிறைவேற்றிக் கொள்ள வேகமாக செயல்படுவீர்கள்

**விருட்சிகம்**
புதிய முயற்சியை தள்ளி வையுங்கள். வழக்கமான செயல்கள் நன்மை தரும். பிரச்னைகள் உங்களைத் தேடி வரும். யாரிடமும் வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம். அரசு வழியில் சில நெருக்கடிகள் ஏற்படும்.

**தனுசு**
கனவுகள் நிறைவேறும் நாள். எதிர்பார்த்த ஒன்றில் சாதகமான நிலை உண்டாகும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட பிரச்னைகள் அனைத்தும் விலகும். நண்பரின் உதவியுடன் செயலில் வெற்றி காண்பீர்கள்.

**மகரம்**
கடவுள் அருளால் செயல்களில் சாதகமான நிலையைக் காண்பீர்கள். கேள்விக்குறியாக இருந்த ஒரு முயற்சி இன்று உங்களுக்கு சாதகமாகும். எதிரிகள் பலமிழந்து போவர்.

**கும்பம்**
குடும்ப உறவுகளிடம் மனக்கசப்பு உண்டாகும். அனுசரித்துச் செல்லுங்கள். பிள்ளைகளால் வேதனைக்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் சங்கடங்களை சந்திப்பீர்கள்.

**மீனம்**
அரசு ஊழியர்கள் தங்களின் பணியில் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். வேலைப்பளு கூடும். மேலதிகாரியின் கண்டிப்பிற்கு ஆளாவீர்கள். கவனமுடன் செயல்படுங்கள். நினைத்தவற்றில் அனுகூலமற்ற நிலை இருக்கும்.

### அ. தி. மு. க. பொதுக் கூட்டம்:

# நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு

புதுடில்லி, ஜூன் 30

அ. தி. மு. க. பொதுக்குழு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து இணை ஒருங்கிணைப்பாளர் பழனிசாமி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

அ. தி. மு. க. ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வத்தின் ஆதரவாளரும், அ. தி. மு. க. பொதுக்குழு உறுப்பினருமான திருப்பூர் எம். சண்முகம், 'அ. தி. மு. கவில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர்களின் பதவிக் காலம் இன்னும் 5 ஆண்டுகளுக்கு இருக்கும் நிலையில் ஒற்றைத் தலைமை தொடர்பாகவோ அல்லது வேறு விடயங்களுக்காகவோ அ. தி. மு. க. பொதுக்குழுவில் எந்தவொரு தீர்மானமும் கொண்டு வரக் கூடாது, என வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை கடந்த ஜூன் 22 நள்ளிரவில் விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள், 'அ. தி. மு. க. பொதுக்குழுவில் ஏற்கெனவே நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ள 23 தீர்மானங்கள் தவிர்த்து புதிய தீர்மானங்கள் குறித்தோ அல்லது கட்சி விதிகளில் திருத்தம் செய்வது குறித்தோ எந்தவொரு முடிவும் எடுக்கக் கூடாது என உத்தரவிட்டிருந்தனர். இதையடுத்து ஜூன் 23ஆம் திகதி நடைபெற்ற அதிமுக பொதுக்குழுவில் ஒற்றைத் தலைமை தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து அ. தி. மு. க. ஒருங்கிணைப்பாளரான பழனிசாமி தரப்பில் தற்போது உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், அ. தி. மு. கவின் பொதுக்குழுவில் தலையீடு செய்து நீதிமன்றம் எந்த உத்தரவுகளையும் பிறப்பிக்க அதிகாரம் கிடையாது. அ. தி. மு. க. அவைத் தலைவர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களின் ஒட்டுமொத்த கருத்தை பொறுத்தே தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்படும்.

கட்சி விதிகளின்படி பொதுக்குழுவுக்கே அனைத்து அதிகாரங்களும் உள்ளது. இதன்படி, விதிகளை திருத்தம் செய்யவும், கட்சியில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளை நீக்கிவிட்டு பொதுச் செயலாளர் பதவியை மீண்டும் உருவாக்கவும் பொதுக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

எனவே, அ. தி. மு. க. பொதுக்குழு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் கடந்த ஜூன் 22ஆம் திகதி பிறப்பித்துள்ள உத்தரவு சட்டவிரோதம் என்பதால் அதற்கு தடை விதிக்க வேண்டும். அந்த உத்தரவை இரத்து செய்ய வேண்டும் - இவ்வாறு கோரப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வருகிறது. (ஐ)

# நடிகை மீனாவின் கணவர் மரணம்!

சென்னை, ஜூன் 30

உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

தென்னிந்திய பிரபல பன்மொழி நடிகையான மீனா, தமிழ் திரையுலகில் மட்டு மின்றி, கன்னடம், தெலுங்கு உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு பெங்களூரைச் சேர்ந்த மென்பொருள் பொறியியலாளரான வித்யாசாகரை நடிகை மீனா திரு மணம் செய்து கொண் டார். இந்த தம்பதிக்கு நைனிகா என்ற மகள் உள்ளார்.

இந்த நிலையில் நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகர் நுரையீரல் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதை யடுத்து அவருக்கு நுரையீரல் தொற்று மாற்று அறுவை சிகிச்சை செய்ய மருத்துவர்கள் அறிவுறுத்தினர்.

ஆனால், நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு நன்கொடை வழங்குபவர்கள் யாரும் இல்லாததால் அவருக்கு சிகிச்சை அளிக்க இயலவில்லை.



இதனிடையே கடந்த ஜனவரி மாதம் வித்யாசாகர் கொரோனாவால் பாதிக்கப்பட்டார். ஆனால், சிகிச்சைக்கு பின் அவர் குணமடைந்து வீடு திரும்பினார்.

இந்நிலையில், மீண்டும் நுரையீரல் பிரச்னை காரண மாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். உயர் சிகிச்சைக்காக மற்றொரு தனியார் மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் வித்யாசாகர் செவ்வாய்க் கிழமை இரவு உயிரிழந்தார்.

# உள்ளாட்சி தேர்தலில் அ. தி. மு. கவுக்கு இரட்டை இலை சின்னத்தில் சிக்கல்?

சென்னை, ஜூன் 30

உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் அ. தி. மு. க. வேட்பாளர்கள் இன்று மாலைக்குள் படிவங்களை தாக்கல் செய்யாவிடில் அவர்களுக்கு இரட்டை இலை சின்னம் கிடைக்காது என்று தேர்தல் ஆணைய விதிகளில் உள்ளது.

தமிழகத்தில் காலியாக உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஜூலை 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி மொத்தம் 510 பதவிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இந்தப் பதவிகளுக்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 20 ஆம் தேதி தொடங்கி 27 ஆம் திகதி நிறைவு பெற்றது. வேட்புமனுக்களை திரும்பப் பெற இன்று (ஜூன் 30) கடைசி நாள் ஆகும்.

510 பதவிகளில் 34 பதவிகளுக்கு கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெற உள்ளது. அ. தி. மு. கவில் எழுந்துள்ள ஒற்றைத் தலைமை விவகாரத்தால் கட்சி வேட்பாளர்களை அங்கீகரித்து படிவம் ஏ மற்றும் படிவம் பி ஆகியவற்றில் கையொப்பமிடுவதில் ஒருங்கிணைப்பாளர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு தொடர்கிறது.

உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடுவோரின் வேட்பு மனுக்கள் பரிசீலனை நேற்று முன்தினத்துடன் முடிந்தது. வரும் 30 ஆம் திகதிக்குள்ளாக வேட்புமனுவை வாபஸ் பெற வேண்டும். வாபஸ் பெறுவதற்கான கால அவகாசம் நிறைவடைவதற்கு முன்பாகவே படிவங்களை வழங்கினால் சின்னம் ஒதுக்கப்படும் என தேர்தல் ஆணையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று மாலை 3 மணியுடன் வேட்புமனு திரும்ப பெறுவதற்கான கால அவகாசம் நிறைவடையும் போது சுயேட்சை வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அதற்குள்ளாக கட்சித் தலைமை கையொப்பமிட்டு ஒப்புதல் அளித்தால் மட்டுமே அ. தி. மு. க. வேட்பாளர்களுக்கு இரட்டை இலை சின்னம் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று மாலைக்குள் படிவங்களை சமர்ப்பிக்க தவறினால் அ. தி. மு. க. வேட்பாளர்கள் சுயேச்சை சின்னத்திலேயே போட்டியிட வேண்டிய சூழல் உருவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இலங்கையின் அவசர தேவைக்கு இந்தியாவிலிருந்து எரிபொருள்!

## இரு தரப்பு பேச்சுக்கள் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 30

இலங்கையின் அவசர எரிபொருள் தேவைகள் குறித்து இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட இந்தியாவின் பெற்றோலிய விவகார அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியுடன் புதுடில்லியில் பேச்சுகளை மேற்கொண்டுள்ளார்.

அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் இரண்டு வாரங்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என அறிவிப்பு வெளியாகியுள்ள நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பெற்றோலிய பொருள்கள் வழங்கல் மற்றும் விநியோகிப்பது தொடர்பில் இலங்கை எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து இந்தச் சந்திப்பில் இலங்கைத் தூதுவர் எடுத்துரைத்துள்ளார் என இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மக்கள்எதிர்கொண்டுள்ள பெரும் நெருக்கடிகள் குறித்தும் அவர் விவரித்துள்ளார்.

கடனுதவி மூலம் எரிபொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியா வழங்கிய உதவிக்காக நன்றி தெரிவித்துள்ள மிலிந்த மொராகொட, தற்போது இலங்கைக்கு தேவையாக உள்ள பெற்றோல் மற்றும் டீசலை அவசர அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியப் பாடுகள் குறித்து இந்திய அமைச்சருடன் பேச்சுகளை மேற்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை எதிர்கொண்டுள்ள உடனடி நெருக்கடிகளுக்கு தீர்வை காண்பதற்கு இந்தியாவும் இலங்கையும் எந்த வழிமுறைகளை பின்பற்றலாம் என்பது குறித்து இருவரும் ஆராய்ந்துள்ளனர். இந்த சந்திப்பின்போது பெற்றோலிய எண்ணெய், எரிவாயு துறைகளில் இரு நாடுகளும் எவ்வாறு நீண்டகால உறவுக ளைப் பேணலாம் என்பது குறித்து இரு தரப்பினரும் பேசியுள்ளனர். (அ)

# ஊவா வெல்லஸ பல்கலைக்கழக கல்வி நடவடிக்கை இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 30

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் மறு அறிவித்தல் வரை கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படுவதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# மாகாணத் தேர்தலை நடத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் வழங்குக!

## தமிழ் முற்போக்கு கூட்டணி இந்தியாவிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 30

**மாகாணசபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு இலங்கை அரசுக்கு, இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.**

தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி ராதாகிருஷ்ணன், நிர்வாகச் செயலாளர் மயில்வாகனம் உதயகுமார் ஆகியோர், கூட்டணியின் செயலாளர் ஆகியோர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி, அரசியல் நிலைவரம், மலையக மக்களுக்கான உதவித் திட்டங்கள் உட்பட பல விடயங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளன.

இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு இந்தியா, பொருளாதார ரீதியில் வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த முற்போக்கு கூட்டணி பிரதிநிதிகள், இலங்கை மக்களுக்கான இந்திய உதவிகள் தொடர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை அரசுக்கு, தம்மால் முடிந்த அழுத்தத்தை இந்தியா பிரயோகிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மனோ கணேசன், வடக்கு , கிழக்கு உட்பட 9 மாகாணசபைகளுக்கும் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலை நடத்துவதற்கான நிதி திறைசேரியிடம் இல்லை. எனவே, இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமூகம் இதற்கான நிதி பங்களிப்பை தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்க வேண்டும்.

இலங்கையின் தற்போதைய அரசுமீது சர்வதேச சமூகத்துக்கு நம்பிக்கை இல்லை. தேசிய மட்டத்திலான தேர்தலை நடத்தி மக்களின் மனநிலையை அறிய ஜனாதிபதியும் தயாராக இல்லை.

எனவே, 9 மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதன்மூலம் மக்கள் ஆணையை அறியலாம். ஜனாதிபதி தரப்புக்கு மக்கள் ஆணை வழங்கினால் அவர் பதவி தொடரலாம். இல்லையேல் வெளியேற வேண்டும்-என்றார். (அ)

# மகாசங்கத்தின் ஆலோசனையை பின்பற்றாததே இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு காரணம்!

## அஸ்கிரிய மகாநாயக்கர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 30

அதிகாரிகள் மகா சங்கத்தினரின் ஆலோசனையைப் பெறாததன் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளதாக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஞானரதன தேரர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேரர், இலங்கையின் மதகுருமார்கள் தமக்கு வழங்கிய ஆலோசனைகள் மற்றும் எச்சரிக்கைகளை அரச அதிகாரிகள் புரிந்து கொள்ளவில்லை.

மக்கள் மீதான பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை குழந்தைகளும் புரிந்து கொள்ள முடியும்.

பொருளாதார முறைகேடுகள் மற்றும் மதத் தலைவர்கள் வழங்கும் அறிவுரைகளை அறியாமை காரணமாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது-என்றார். (அ)

# எரிபொருளின்றி தவித்த ரஷ்ய தம்பதிக்கு எரிபொருள் வழங்கி உதவிய இலங்கையர்!

கொழும்பு, ஜூன். 30

அவசரமாக விமான நிலையம் செல்வதற்கு எரிபொருள் இல்லாமல் தவித்த ரஷ்ய தம்பதிக்கு கலேவெல தலகிரியாகம பிரதேசத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் தங்களது பாதுகாப்பு இருப்புகளிலிருந்து எரிபொருளை வழங்கி அவர்களை விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்த சம்பவமொன்று கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

நாடு திரும்புவதற்காக விமான நிலையம் செல்லவிருந்த ரஷ்ய தம்பதியினர் எரிபொருள் இல்லாமல் தவித்துள்ளனர். பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முற்றாக மூடப்பட்டிருந்ததால், அவர்கள் எரிபொருளைப் பெற முடியாமல் தவித்துள்ளனர்.

தாம் ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு வந்த தம்பதியென்றும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு செல்வதற்கு எரிபொருள் வழங்குமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.

அதன்படி, எரிபொருள் நிரப்பு நிலையத்தின் உரிமையாளர் ராஜபக்ஷ பண்டார என்பவர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் தீர்ந்து போயிருந்தபோதிலும், தனது எரிபொருள் பம்பிகளுக்கு சேதம் ஏற்படாதவாறு தனது பாதுகாப்பு கையிருப்பிலிருந்து அவர்களது தேவையை பூர்த்தி செய்ய முன்வந்துள்ளார். ரஷ்ய சுற்றுலாப்பயணி அவரது சேவை குறித்து திருப்தி தெரிவித்ததுடன், இது குறித்து தூதரகங்களுக்கும் அறிவிப்பதாக கூறினார். இலங்கை மக்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் இருப் பதாகவும், தங்கள் நாட்டு அதி காரிகளுக்கு தெரிவித்து, இலங் கைக்கு எரிபொருளை வழங்கு வதற்கு உதவுமாறும் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளிடம் எரி பொருள் நிலையத்தினர் தெரிவித்தனர். (அ)



# பாராளுமன்ற இணையத்தளத்தில் எம்.பி.க்களின் முகவரிகள் நீக்கம்!

கொழும்பு, ஜூன் 30

இலங்கை பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் முகவரிகளும் நீக்கப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பாராளுமன்றத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் தற்போது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 உறுப்பினர்களின் கைபேசி இலக்கங்கள் மற்றும் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் உள்ள அவர்களது வசிப்பிடங்களின் முகவரிகள் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருந்தன. (அ)

# குளத்தில் தவறி விழுந்து 3 வயது சிறுவன் மரணம்!

கொழும்பு, ஜூன் 30

பன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்கெல்ல பகுதி யில் குளத்தில் தவறி விழுந்து 03 வயது சிறுவன் உயிரிழந்துள்ளார்.

முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் குளத்தில் தவறி விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மடுல்கெல்ல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பன்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் சம்பள பிரச்னைக்கு தீர்வு தேவை!

*வடக்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து*

**யாழ்ப்பாணம், ஜூன் 30**

**எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் எமது சம்பளப் பிரச்சினைக்கு உரிய தீர்வு ஏற்படாவிட்டால் மீண்டும் வட மாகாண ஆளுனரை சந்தித்து அடுத்த கட்டம் தொடர்பாக கலந்துரையாட வடமாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தீர்மானித்துள்ளனர்.**

வட மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கும் இடையில் நேற்று முன் தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இணையவழி கலந்துரையாடலொன்று இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் வைத்தியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கு மாகாணத்தில் வைத்தியர்களின் சம்பளத்தை குறைத்துள்ளதுடன் முழுமையாக வழங்கப்படாத நிலை காணப்படுவதை ஆளுநரிடம் சுட்டிக்காட்டியதுடன் இலங்கையின் இரண்டு மாகாணங்களிலேயே இந்த நிலை காணப்படுகிறது என்பதையும் ஆளுநருக்கு தெரிவித்ததாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கதிரமலை உமாசுதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பில் சுகாதார அமைச்சு மற்றும் நிதியமைச்சு உடனான அரச மருத்து அதிகாரிகள் சங்கத்தினுடனான சந்திப்பில் எமது சம்பள குறைப்பு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளிக்கப்பட்டுள்ளது தொடர்பாக ஆளுநருக்கு தெரிவித்தோம். ஆகவே இது தொடர்பான சுற்றறிக்கைகளைப் பெற்று உடனடியாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு செயல்படவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் பணித்தார்.

வைத்தியர்கள் மற்றும் சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் எரிபொருள் நிலையங்களில் வரிசையில் நிற்கும் நிலையே காணப்படுவதை சுட்டிக்காட்டியபோது இது தொடர்பில் உரிய பொறிமுறை ஒன்றை வகுக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது-என்றார். (அ)

## சீனா நன்கொடையாக வழங்கிய 5000 மெற்றிக் தொன் அரிசி வந்தது

*கொழும்பு, ஜூன் 30*

சீனாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 10,000 மெட்ரிக் டன் அரிசியின் முதலாவது தொகுதி நேற்று முன் தினம் இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. 44 கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட 5,000 மெற்றிக் தொன் அரிசி, சீனத் தூதரகப் பிரதிநிதிகளால் இலங்கையின் பதில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

எதிர்வரும் 6 மாதங்களுக்கு இந்த அரிசி பகிர்ந்தளிக்கப்படுமென சீன தூதுரகம் தெரிவித்துள்ளது. (அ)

## அமெரிக்க ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி கோட்டா

*கொழும்பு, ஜூன் 30*

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

800,000 இற்கு மேற்பட்ட இலங்கை சிறார்களுக்கும், 27,000 க்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவளிப்பதறம்காக 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற ஜி-7 உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜோ பைடனுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இது குறித்து பதிவிட்டுள்ள ருவிட்டர் குறிப்பில்,

800,000 க்கும் மேற்பட்ட இலங்கை சிறார்களுக்கும், 27,000 க்கும் மேற்பட்ட கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு உணவளிப்பதற்காக 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளமைக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நெருக்கடியான நேரத்தில் அமெரிக்கா வழங்கிய உதவிகளுக்கு இலங்கை மக்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பர் என தெரிவித்துள்ளார். (அ)

## ஆசிரியர்களை பாடசாலைக்கு வற்புறுத்தி அழைக்க முடியாது

*கொழும்பு, ஜூன் 30*

ஆசிரியர்களை வற்புறுத்தி பாடசாலைகளுக்கு அழைக்கும் செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டதன் படி பாடசாலைகளுக்கு சமூகளிக்க முடியாத ஆசிரியர்களுக்கு விசேட விடுமுறை அறிவிக்கப்படும் என அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

எனவே, ஆசிரியர்கள் அச்சமடைந்து செயற்படவேண்டாம் என அவர் குறிப்பிட்டார். (அ)

## ஆண்டின் முதல் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 1.6 வீதத்தால் வீழ்ச்சி!

*கொழும்பு, ஜூன் 30*

2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 1.6 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரங்கள் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் தேசிய கணக்குகள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பான முதலாம் காலாண்டுக்கான அறிக்கை அந்த திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 1.6 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 4 நேர் சதவீதமாக காணப்பட்ட பொருளதார வளர்ச்சி வீதம், இந்த ஆண்டின் முதல் காலாண்டில் 1.6 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. (அ)

## சட்டவிரோதமாக பதுக்கிவைக்கப்பட்டிருந்த 75 000 லீற்றருக்கும் அதிக எரிபொருள் மீட்பு!

*கொழும்பு, ஜூன் 30*

எரிபொருளை மறைத்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் தொடர்பிலும் சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்தவர்களிடமும் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றி வளைப்புகளின்போது இது வரை 23 728 லீற்றர் பெற்றோல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 41,382 லீற்றர் டீசல் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதனை தொடர்ந்து, 11 876 லீற்றர் மண்ணெண்ணெய்யையும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் 768 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## ‘ஒரு நாடு, ஒரே சட்டம்’ செயலணி இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம்

*கொழும்பு, ஜூன் 30*

‘ஒரு நாடு, ஒரே சட்டம்’ ஜனாதிபதி செயலணியின் இறுதி அறிக்கையை அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மே மாதம் 28ஆம் திகதி ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ செயலணியின் பதவி காலம் நிறைவடைந்திருந்த நிலையில், அதன் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

‘ஒரு நாடு, ஒரே சட்டம்’ என்ற ஜனாதிபதி செயலணியானது 2021 ஒக்ரோபர் 26 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஸ்தாபிக்கப்பட்டது.

13 பேர் கொண்ட இந்த செயலணியின் தலைவராக கலகொடே அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டார்.

இலங்கைக்குள் ‘ஒரு நாடு, ஒரே சட்டம்’ மற்றும் சட்ட வரைவைத் தயாரித்து, நீதி அமைச்சினால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் திருத்தங்களை ஆய்வு செய்து பொருத்தமானதாகக் கருதப்படும் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதை நோக்காகக் கொண்டு இந்த செயலணி உருவாக்கப்பட்டது.

அதன்படி, பொது மக்கள் மற்றும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய நிபுணர்கள் குழுவின் கருத்துக்களை இந்த செயலணி பெற்றிருந்தது.

இந்த நிலையில், குறித்த செயலணி சேகரித்த தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (அ)

## 22 ஆவது திருத்தச் சட்டம் விரைவில் சபைக்கு வரும்

*கொழும்பு, ஜூன் 30*

22 ஆவது திருத்தச்சட்ட மூலம் ஒரிரு நாட்களுக்குள் வர்த்தமானியில் வெளியிடப் படும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

“இறுதிப்படுத்தப்பட்ட 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இது ஒரிரு நாட்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும். அதன் பின்னர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

22 ஆவது திருத்தச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேறிய பின்னர், அது 21 ஆவது திருத்தச்சட்டமூலமாக ஏற்றுக் கொள்ளப்படும்.” என் றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## எரிபொருள் வாங்க சென்ற குடும்பஸ்தர் விபத்தில் பலி!

*தர்கா நகரில் சோகம்!!*

*கொழும்பு, ஜூன் 30*

எரிபொருள் வரிசையில் காத்திருந்த நபரொருவர் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் பலியாகியுள்ளார்.

அளுத்கம, தர்கா நகர் பகுதியில் வசிக்கும் 53 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

எரிபொருள் பெறுவதற்காக தர்கா நகரிலுள்ள எரிபொருள் நிலைய வளாகத்தில் நேற்று முன் தினம் இரவு முதல் வரிசையில் காத்திருந்த அவர், நேற்று அதிகாலை வீடு செல்லும்போது, டிப்பரொன்று மோதியதில் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# வீட்டுப் பிரசவங்களின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, ஜூன் 30

கடந்த சில நாட்களாக நாட்டின் சில பகுதிகளில் வீட்டுப் பிரசவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி, பொருளாதார நெருக்கடிகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கு செல்வதில் உள்ள சிரமம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

நிக்கவெரட்டிய, புறக்கோட்டை, மோதரை உள்ளிட்ட பல பிரதேசங்களில் கடந்த இரண்டு நாட்களாக இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எவ்வாறாயினும், குடும்ப சுகாதார ஊழியர்களின் உதவியுடன் பிரசவங்கள் மேற்கொள்ளப்பட்டதால், குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் நலமுடன் இருப்பதாக அரச குடும்ப சுகாதார சேவைகள் சங்கத்தின் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். (அ)

# குற்றச்செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு

கொழும்பு, ஜூன் 30

நாட்டில் நிலவி வரும் எரிபொருள் வரிசைகளினால் குற்றச் செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மக்கள் எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதனால் அங்கு அதிகளவில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக குற்றச் செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் பொலிஸாருக்கு தடங்கல் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் எரிவாயு விநியோக நிலையங்களில் கூடுதல் எண்ணிக்கையில் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதனால் குற்றச் செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இரவு நேர ரோந்துப் பணிகள் மற்றும் ரோந்துப் பணிகள் என்பன பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச் செயல்களை தடுப்பதற்கு பொலிஸார் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வரும் போதிலும் ஆளணி வளம் அதிகளவில் வரிசைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ)

# 10 முதல் 15 மணித்தியாலங்கள் எதிர்வரும் நாட்களில் மின்தடை

## மின் பொறியியலாளர் சங்கம் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 30**

**இலங்கையில் எதிர்வரும் நாட்களில் 10 முதல் 15 மணித்தியாலங்கள் மின் வெட்டை நடைமுறைப்படுத்த நேரிடலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

மின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

நாட்டில் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும், நீர் மின் உற்பத்தி நிலையங்களில் உரிய முறையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படாவிட்டால் இந்த நிலை உருவாகும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் ஒரு பகுதி திருத்தப் பணிகளுக்காக மூடப்பட்டுள்ளது. இதனால் 270 மெகாவோட் மின்சார உற்பத்தி தடைப்பட்டுள்ளது.

எரிபொருள் பிரச்னையால் மேலும் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக மின் பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் கூறினார்.

மின் உற்பத்தி உரிய முகாமைத்துவம் இன்றி நீர் மின் உற்பத்தி செய்தால், நீர் மட்டம் குறைந்து தற்பொழுது உற்பத்தி செய்யும் அளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் போகும் எனவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், மின்சார உற்பத்தி தொடர்பில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது எனவும் அவர் கூறினார்.

இந்த நிலையில் அனைத்து தரப்பினரும் இணைந்து பேச்சு நடத்தாமை பாரிய சிக்கல்களை உருவாக்கியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# ரயில் என்ஜினில் இருந்து டீசல் திருடிய நபர் கைது

கொழும்பு, ஜூன் 30

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலில் இருந்து நபரொருவர் டீசலை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம் பகுதியில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயில் என்ஜினில் இருந்து அந்த நபர் டீசலை திருடியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் சிலாபம் ரயில் நிலையத்தில் கடமை யாற்றும் உதவி ரயில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து 15 லீற்றர் டீசலையும் பொலிஸார் கைப்பற்றினர்.

நேற்று காலை கொழும்பு நோக்கிச் செல்லும் ரயிலின் இயந்திரம் சிலாபம் ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், அதில் இருந்த எரிபொருளை சந்தேக நபர் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# நோயாளர்களின் அவசர தேவைகளுக்காக பொறிமுறையொன்று உருவாக்கியுள்ளோம்

## கல்முனை சுகாதார சேவை பணிப்பாளர் தெரிவிப்பு

அம்பாறை, ஜூன் 30

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து சிக்கல்கள் இருப்பதனால் சுகாதாரத்துறையினரை வாரத்தில் மூன்று நாட்கள் பணிக்கு அழைப்பது, கடமை நேரத்தில் தளர்வுகளை ஏற்படுத்துவது, தூரத்திலிருந்து பணிக்கு வரும் பணியாளர்களை அவர்களுக்கு இலகுவாக சென்றடைய கூடிய இடங்களுக்கு கடமைக்கு சமூகமளிக்க வாய்ப்புக்களை ஏற்படுத்துவது போன்ற நிறைய திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். எங்களின் அலுவலகத்தில் கொரோனா காலத்தில் இருந்தது போல சுழற்சி முறையையும் அமுல்படுத்தி இரு வாரங்களில் ஐந்து நாட்களுக்கு மட்டும் கடமைக்கு சமூகமளிக்கும் முறைமையை அறிமுகம் செய்துள்ளோம். இருந்தாலும் நிலையத் தலைவர்கள், நான் உட்பட நிறைவேற்று உத்தியோகத்தர்களை எல்லா நாளும் பணிக்கு அழைக்கும் நடைமுறையை ஏற்படுத்தி உள்ளோம் என கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

சமகால பொருளாதார நெருக்கடியில் எரிபொருள் பெறுதல் மற்றும் போக்குவரத்து சிக்கல்கள் தொடர்பில் சுகாதாரத்துறையின் விசேட ஏற்பாடுகள் பற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

வைத்தியசாலைகளிலும் பணியாளர்களின் இடங்களுக்கு அண்மை வைத்தியசாலைகளில் பணியாற்ற வாய்ப்புக்களை ஏற்படுத்துவதுடன், சுகாதாரத்துறை 24 மணிநேரமும் பணியாற்றவேண்டிய துறை.

ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள மதஸ்தலங்கள், ஓட்டோ சங்கங்கள், பொது அமைப்புக்களின் உதவியுடன் கற்பிணித் தாய்மார்கள், அவசர நோயாளர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு அழைத்துவரும் நடவடிக்கை தொடர்பில் வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். நோயாளிகளின் கையில் வழங்கப்பட்டுள்ள நோய் நிர்ணய அட்டையில் அவசர அழைப்புக்களுக்கான இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதி அவசர தேவைகளுக்கு மட்டும் குறித்த சிறிய தூரங்களுக்கு வைத்திய சாலை அம்புலன்ஸ் வண்டியை வீட்டுக்கு அனுப்பி நோயாளர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வருவது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க உள்ளோம்.

மக்கள் எப்போதும் சுகாதாரத் துறைக்கு மரியாதை கொடுத்து வந்திருக்கிறார்கள். இப்போது எரி பொருள் வரிசையில் பல மணி நேரங்களாக காத்திருந்த விரக்தியில் யாரை கண்டாலும் எரிந்து விழும் நிலையில் மக்கள் இருக்கிறார்கள். சுகாதாரத்துறைக்கு மட்டுமல்ல இந்த பிரச்சினை சட்டத்துறை, காவல்துறை, கல்வித்துறை என எல்லா துறையினருக்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த பிரச்சினை இருக்கிறது. அத்தியவசிய மற்றும் முன்னிலை சேவை வழங்கும் பணியாளர்களுக்கு ஒரு பொறி முறையின் கீழ் அரசாங்கம் எரிபொருள் வழங்க நினைத்தாலும் கெடுபிடிகள் காரணமாக அது எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் வழங்க முடியாத நிலையே இப்போது காணப்படுகிறது.

எரிபொருள் தட்டுப்பாட்டு அறிவிப்புக்கள் காரணமாக எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நிறைய எரிபொருள் இப்போது மக்களிடம் சேமிப்பில் இருக்கிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களினால் மக்களுக்கு எவ்வளவு எரிபொருளை கொள்வனவு செய்து வழங்கினாலும் போதாத நிலையே இருக்கிறது-என்றார். (அ)

# அவசரமான வழக்குகள் மாத்திரம் விசாரணை!

கொழும்பு, ஜூன் 30

அவசர வழக்குகளுக்கு மாத்திரம் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிச் சேவை ஆணைக்குழு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அனைத்து நீதிபதிகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் பொதுப் போக்குவரத்தில் ஏற்படும் சிரமங்களை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், வழக்கை ஒத்திவைப்பது குறித்தும், சம்பந்தப்பட்ட விவகாரங்கள் குறித்தும் சட்டத்தரணிகள் சங்கங்களுடன் விவாதித்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# எரிபொருள் தட்டுப்பாடு; ரயில் சேவைகள் இரத்து!

கொழும்பு, ஜூன் 30

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு மற்றும் காங்கேசன்துறைக்கு புறப்படவிருந்த ரயில்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி காரணமாக ரயில் நிலைய அதிகாரிகள் மற்றும் இளநிலை ஊழியர்கள் பணிக்கு வராததை யடுத்தே ரயில் சேவைகள் இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளன.

கோட்டையிலிருந்து காலை 6.35 மணிக்கு மட்டக்களப்புக்கு புறப்படவேண்டிய உதய தேவி எக்ஸ்பிரஸ் ரயிலும், 6.05 மணிக்கு காங்கேசன் துறைக்குக்கு புறப்படவேண்டிய யாழ்தேவி ரயிலும் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, நேற்று முன்தினம் இரவு 9.45 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து பொல்கஹவெல நோக்கி புறப்படவிருந்த ரயில் சேவையும் கட்டுப்பாட்டாளர்கள் இல்லாத காரணத்தால் இரத்து செய்யப்பட்டது.

நேற்று முன் தினம் இரவு திடீரென ரயில்கள் இரத்து செய்யப்பட்டமை குறித்து ரயில் நிலைய ஊழியர்கள் மீது பயணிகள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

# அமெரிக்காவில் கைவிடப்பட்ட கண்டெய்னர் லொறியில் 46 சடலங்கள்

## என்ன நடந்தது?

ஏஞ்சலிகா கசாஸ்

அமெரிக்காவிலுள்ள டெக்சாஸின் சான் அன்டோனியோவின் புறநகரில் கைவிடப்பட்ட நிலையில் நின்றிருந்த கண்டெய்னர் லொறியில் இடம் பெயர்ந்து குடியேறியவர்கள் என்று நம்பப்படும் சுமார் 46 பேர் இறந்து கிடந்தனர்.

நான்கு குழந்தைகள் உட்பட 16 பேர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தீய ணைப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயிர் பிழைத்தவர்கள், "தொடுவதற்கே சூடான நிலையில்" இருந்தனர். வெப்ப அதிர்ச்சி மற்றும் வெப்ப சோர்வு ஆகியவற்றால் அவதிப்பட்டனர்.

அமெரிக்க-மெக்சிகோ எல்லையில் இருந்து 250கி.மீ தொலைவிலுள்ள சான் அன்டோனியோ, ஆட்கடத் தல்காரர்களுக்கான முக்கியமான போக்குவரத்துப் பாதை.

ஆட்கடத்தல்காரர்கள், ஆவணமற்ற புலம்பெயர்ந் தோர் அமெரிக்க எல்லைக்குள் நுழைந்த பிறகு, அவர் களை தொலைதூரப் பகுதிகளில் அவர்களைச் சந்தித்து, ஏற்றிச் செல்ல அடிக்கடி லொறிகளைப் பயன் படுத்துகின்றனர்.

"அவர்களுக்கு குடும்பங்கள் இருந்தன. அவர்களுக் கான ஒரு சிறந்த வாழ்க்கையைக் கண்டுபிடிக்க முயன்றி ருக்கலாம். இதுவொரு பயங்கரமான துயரம்," என்று சான் அன்டோனியோ மேயர் ரான் நிரன்பெர்க் கூறினார்.

அவசரக்கால முதல்நிலை கவனிப்பை வழங்கக்கூடிய வர்கள் ஆரம்பத்தில் உள்ளூர் நேரப்படி மாலை சுமார் 6 மணியளவில் இறந்தவர்களைப் பற்றிய தகவலறிந்த பின்னர், சம்பவ இடத்திற்கு வந்ததாக சான் அன்டோ னியோ தீயணைப்புப் பிரிவின் தலைவர் சார்லஸ் ஹூட் செய்தியாளர்களிடம் கூறினார்.

"ஒரு லொறியைத் திறக்கும்போது அதற்குள் நாங்கள் இறந்த உடல்களின் அடுக்குகளைப் பார்த்திருக்கக் கூடாது. நாங்கள் யாரும் அதைக் கற்பனை செய்து கொண்டு வேலைக்கு வருவதில்லை," என்று அவர் கூறினார்.

டிரைவரால் கைவிடப்பட்ட வாகனத்தில் குளிரூட் டும் வசதியில்லை என்றும் அதற்குள் குடிநீர் இல்லை என்றும் அவர் கூறினார்.

### ஒரு பயங்கரமான காட்சி

இப்போது இருட்டாக உள்ளது. மேலும் சில சட்ட அமலாக்க வாகனங்களும் இருண்ட சாலையைச் சுற்றி வளைத்திருக்கும் காவல்துறையின் சில டேப்புகளும் மட்டுமே இதுவொரு பெரிய உயிரிழப்பு நிகழ்வின் காட்சி என்பதைத் தெளிவாக்குகிறது.

பாதிக்கப்பட்டவர்கள், புலம்பெயர்ந்தவர்களாகக் கருதப்பட்டு, வெப்பச் சோர்வு அல்லது உடலில் நீரிழப்பு காரணமாக உயிரிழந்திருக்கலாம்.

சற்று தொலைவிலுள்ள ஒரு மரம் வெட்டும் ஆலை யின் காவலாளியான எட்வர்ட் ரெய்னா, தனது இரவு பணிக்கு வந்து இதைக் கேட்டபோது, இந்தச் செய்தி யைக் கேட்பதில் ஆச்சர்யமில்லை என்றார்.

லொறி கண்டுபிடிக்கப்பட்ட இடத்திற்கு அருகில் செல்லும் ரயிலில் இருந்து புலம்பெயர்ந்தோர் குதிப் பதை எத்தனை முறை பார்த்திருப்பார் என்ற கணக்கையே அவர் இழந்துவிட்டார்.



"விரைவிலோ அல்லது தாமதமாகவோ யாராவது இதில் காயப்படுவார்கள் என்று நான் நினைத்தேன். அவர்களைக் கொண்டு வரும் சட்டவிரோத குழுக்கள் அவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை," என்று எட்வர்ட் ரெய்னா கூறினார்.

இந்தக் கதை இதற்கு முன்பு சான் அன்டோனியோ வில் நிகழ்ந்துள்ளது, ஆனால் இந்த அளவுக்கு இல்லை.

2017-ஆம் ஆண்டில், நகரின் தெற்குப் பகுதியிலும், வால்மார்ட்டுக்கு வெளியே இதேபோன்ற டிராக்டர் டிரெய்லருக்குள் 10 புலம்பெயர்ந்தோர் இறந்து கிடந்தனர்.

சான் அன்டோனியோவின் தெற்குப் பகுதியானது டெக்சாஸ் எல்லை நகரங்களுடன் இந்த நகரத்தை இணைக்கும் இரண்டு முக்கிய நெடுஞ்சாலைகளைக் கொண்ட ஒரு நடைபாதையாகும்.

சான் அன்டோனியோவின் இந்தப் பகுதி குப்பைத் தொட்டிகளும் ஒரு சில வளர்ந்து வரும் சுற்றுப்புறங்க ளும் பெரும்பாலும் கிராமப்புறமாகவும் இருக்கும் இந்தப் பகுதி, இவ்வளவு பெரிய லொறி யாராலும் கவனிக்கப்படாமல் செல்வதை, இப்படியொன்று நடக்காத வரை, எளிதாக்குகிறது.

அரசியல் பிரச்னையாகவுள்ள புலம்பெயர் குடியேற்றம்

அதே செய்தியாளர் கூட்டத்தில் பேசிய சான் அன்டோனியோவின் காவல்துறை தலைவர் வில்லியம் மேக்மனுஸ், இதன் விசாரணை திங்கள் கிழமை மாலை, மத்திய புலனாய்வு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் மூன்று பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

மெக்சிகோவின் வெளியுறவு அமைச்சர் மார்செலோ எப்ரர்ட், மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டவர்களில் குவாட்டமாலா நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் இருப்பதாகக் கூறினார். பாதிக்கப்பட்ட மற்றவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது இதுவரை தெரிய வரவில்லை.

டெக்சாஸின் குடியரசுக் கட்சி ஆளுநர் கிரெக் ஆப்போட், "அவரது கொடிய திறந்த எல்லைக் கொள்கைகளால் ஏற்பட்ட விளைவு" என்று இதை விவரித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடனை இந்த மரணங்களுக்குக் குற்றம் சாட்டினார்.

ஆப்போட்டுக்கு எதிராக போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பெடோ ஒரௌர்க், இது பெரும் வேதனையைத் தருவதாகவும், "ஆட்கடத்தல் வளையங் களை அகற்றி, சட்டப்பூர்வ இடப்பெயர்வுக்கான விரிவாக்கப்பட்ட வழிகளை மாற்றுவதற்கு" அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புச் செயலர் அலெஜாண்ட்ரோ மயோர்காஸ், இதன் விசாரணை யைத் தன் துறைக்கு எடுத்துக்கொண்டார். அவர், "ஆட்கடத்தல்காரர்கள், லாபம் ஈட்டுவதற்காக குடியேறு பவர்களைச் சுரண்டி ஆபத்தில் தள்ளக்கூடிய, அவர்க ளால் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பொருட் படுத்தாத, இரக்கமற்ற நபர்கள்," என்று கூறினார்.

அமெரிக்காவில் மே மாதத்தில் மெக்சிகோவிலிருந்து அமெரிக்காவுக்குள் நுழைந்த பதிவு செய்யப்படாத 239,000 ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதில் பலர் மிகவும் ஆபத்தான மற்றும் பாதுகாப்பற்ற பாதைகளில் பயணம் செய்தனர்.

ஹொண்டுராஸ், குவாட்டமாலா மற்றும் எல் சால்வடார் போன்ற மத்திய அமெரிக்க நாடுகளிலிருந்து அதிக எண்ணிக்கையிலான மக்கள் தொடர்ந்து கடந்து வருவதால், 2021 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 1.73 மில்லியன் எல்லை கைதுகளின் எண்ணிக்கையை விட அதிகளவிலான எல்லை கைதுகளைச் செய்யும் நிலையில் அமெரிக்க சட்ட அமலாக்க அதிகாரிகள் உள்ளார்கள்.

மத்திய அமெரிக்காவில் வறுமை மற்றும் வன்முறை யிலிருந்து தப்பித்து, ஆவணமற்ற புலம்பெயர்ந்தவர்க ளில் பலர், அமெரிக்க எல்லையைத் தாண்டி வருவதற் காக ஆட்கடத்தல்காரர்களுக்குப் பெரும் தொகையைச் செலுத்துகிறார்கள்.

சமீபத்திய ஆண்டுகளில், புலம்பெயர்ந்தோர் தங்கள் பயணத்தின்போது உயிரிழந்ததற்கு இதேபோன்ற பல உதாரணங்கள் உள்ளன. ஆனால், திங்கள் கிழமையன்று கண்டுபிடிக்கப்பட்டதைப் போல எந்தவொரு கொடிய நிகழ்வும் இதுவரை இல்லை.

இந்தத் துயர சம்பவம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, சான் அன்டோனியோவின் கத்தோலிக்க பேராயர் குஸ்தாவோ கார்சியா-சில்லர், "ஆண்டவரே அவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்கள் சிறந்த வாழ்க்கையை எதிர்பார்க்கிறார்கள். மீண்டுமொரு முறை, குடியேற்ற சீர்திருத்தத்தை கையாள்வதற்கான தைரியமின்மை உயிர்களைக் கொன்று அழிக்கிறது," என்று ட்வீட் செய்தார். (பிபிசி)



# இடைக்கால சர்வகட்சி அரசாங்கத்தை உடனடியாக ஜனாதிபதி அமைக்கவேண்டும்

## வழமையான அரசியல் அணுகுமுறை உகந்ததல்ல என்கிறது தேசிய சமாதானப் பேரவை

பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால கருத்தொருமிப்பு அரசாங்கம் ஒன்றை நிறுவுவதாக அளித்த உறுதிமொழியை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவை வலியுறுத்திக் கேட்டிருக்கிறது.

வழமையான அரசியல் அணுகுமுறைகள் உகந்ததல்ல என்று கூறியிருக்கும் கலாநிதி ஜெகான் பெரேராவை நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கொண்ட சமாதானப் பேரவை செவ்வாயன்று விடுத்திருக்கும் அறிக்கையின் விபரம் வருமாறு:

பொருளாதார நெருக்கடி தொடர்ந்து மோசமாகிக் கொண்டே போகிறது. வரிசைகள் நீண்டுகொண்டு போகின்றன. விலைவாசி தொடர்ந்து உயர்ந்து கொண்டிருக்கிறது. அத்தியாவசிய பாவனைப் பொருட்கள் கிடைப்பதாக இல்லை. குறிப்பாக பொருளாதார நெருக்கடியைக் கையாண்டு பொருளாதாரத்தை உறுதிநிலைப்படுத்தவும் புதிய தேர்தல்களை நடத்தவும் சிறிய அமைச்சரவையைக் கொண்ட இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படும் என்பதே "அறகலய" போராட்ட இயக்கத்தின் எழுச்சியை அடுத்து பரவலான எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால், அவ்வாறு எதுவும் நிகழவில்லை. ஆட்சிமுறை என்பது அரசின் இன்றியமையாத அம்சமாகும்.வெறுமனே அதிகாரத்தைப் பயன்படுத்துவது மாத்திரமல்ல, ஒவ்வொருவரது உரிமைகளையும் சகலரினது நல்வாழ்வையும் பேணிப்பாதுகாப்பதும் நல்லாட்சிமுறையாகும்.

துரதிர்ஷ்டவசமாக, தற்போதைய நிலைவரங்களை நோக்கும்போது அரசாங்கம் அதிகாரத்தில் தன்னை வலுப்படுத்திக்கொண்டு நீண்டகாலத்துக்கு பதவியில் தொடருவதில் நாட்டங்கொண்டு செயற்படுகிறது என்றே தோன்றுகிறது. பொருளாதார மற்றும் அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டபோது பாரதூரமான தவறுகளை இழைத்ததை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்டபோதிலும் கூட ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச தனது பதவிக்காலத்தின் எஞ்சிய இரு வருடங்களுக்கும் பதவியில் தொடரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

அமைச்சர்களின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்டதை விடவும் கூடுதலானதாக இருக்கிறது. அமைச்சர்களும் இராஜாங்க அமைச்சர்களுமாக சுமார் 40 பேர் இப்போது இருக்கிறார்கள். மேலும் 25 மாவட்ட அமைச்சர்களும் நியமிக்கப்படவிருப்பதாக கூறப்படுகிறது.

தனியார்துறையில் இந்த வகையான தவறான முகாமைத்துவம் இடம்பெற்றிருந்தால் அது உடனடி பதவி நீக்கத்துக்கே வழிவகுத்திருக்கும். எமது அரசாங்க சேவையில் அது இடைநிறுத்தத்துக்கு அல்லது இடமாற்றத்துக்கு வழிவகுத்திருக்கும். புதிய பிரதமரும் அமைச்சர்களும் நியமிக்கப்பட்டு 6 வாரங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட பொருளாதார மீட்சிக்கான எந்தவொரு திட்டமும் முன்வைக்கப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக்குழுவும் அமெரிக்க திறைசேரி அதிகாரிகளும் இந்திய அதிகாரிகளும் கொழும்புக்கு விஜயங்களை மேற்கொண்டிருந்தார்கள். அவர்களின் நல்லெண்ணத்தை பயன்படுத்தி தேசிய நலன்களை பாதுகாக்கக்கூடிய பொருளாதார மீட்சி திட்டத்தை வகுக்கமுடியும்.

குறிப்பிட்ட ஒரு காலகட்டத்துக்கு பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால கருத்தொருமிப்பு அரசாங்கம் ஒன்றை நிறுவுவதாக அளித்த வாக்குறுதியை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அவரிடம் கோருகிறது. தற்போதைய நெருக்கடி நிலைமையில் பாராளுமன்றம் எதிரெதிர்க் கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்ற சமர்க்களமாக அல்லாமல் ஒத்துழைப்பை வெளிக்காட்டுகின்ற சபையாக செயற்படவேண்டும்.

ஒரு இடைக்கால ஏற்பாடாக 21வது அரசியலமைப்பு திருத்தம் நிறைவேற்றப்படவேண்டும். அதைத் தொடர்ந்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படவேண்டும். ஜனாதிபதியின் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமையே இன்றைய அனர்த்தத்துக்கு கணிசமானளவுக்கு பங்களிப்பைச் செய்திருக்கிறது. இன, மத பின்னணிகளுக்கு அப்பால் சகல சமூகங்களையும் ஒன்றிணைய வைத்திருக்கும் "அறகலய" போராட்ட களங்களில் இருந்து வெளிக்கிளம்புகின்ற செய்தி இதுவேயாகும்.

# இலங்கையில் எரிபொருள் நெருக்கடி: பொதுமக்களுக்கு பெட்ரோல், டீசல் விற்பனை செய்யத் தடை!

இலங்கையில் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்க அரசாங்கம் திங்கள்கிழமை நள்ளிரவு முதல் நடவடிக்கை எடுத்துள்ளது. பொதுமக்களுக்கு எரிபொருள் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடை இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஊடகம், போக்குவரத்து, சுகாதாரம், விமான சேவைகள், ரயில், துறைமுகம், முப்படையினர் ஆகிய அடையாளம் காணப்பட்ட சில பிரிவினர் மாத்திரம், அத்தியாவசிய சேவையில் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் பொதுமக்கள் தரப்பினர் தற்போது பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள சூழ்நிலையில், எரிபொருள் இறக்குமதி தடைப்பட்டுள்ளது.

இதையடுத்து, திங்கள் நள்ளிரவு முதல் எதிர்வரும் ஜூலை மாதம் 10ம் திகதி வரை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த திங்களன்று கூடிய அமைச்சரவை இந்த தீர்மானத்தை எட்டியதாக, அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார்.

அத்தியாவசிய சேவைகள் தவிர்த்த ஏனைய தரப்பினர், தமது வீடுகளில் இருந்தவாறு தமது பணிகளை செய்யுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நாடு எதிர்நோக்கியுள்ள அசௌகரியமான சூழ்நிலையில், எரிபொருள் பயன்பாட்டை முறையாக பயன்படுத்தும் நோக்கிலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அவ்வாறு இல்லையென்றால், பெட்ரோலிய கூட்டுத்தாபனம் வசம் காணப்படுகின்ற, குறிப்பிட்டளவு எரிபொருளை அத்தியாவசிய சேவைகளுக்கு வழங்க முடியாத சூழ்நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இதேவேளை, பாடசாலைகளை நடத்திச் செல்வது தொடர்பிலான தீர்மானத்தை, அந்தந்த பாடசாலைகளின் பிரதானிகள் மற்றும் மாகாண கல்வி பணிப்பாளருக்கு எடுக்க முடியும் என கல்வி அமைச்சர் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிடுகின்றார்.




பாரியளவில் பொது போக்குவரத்தை பயன்படுத்தாத, கிராமிய மட்டத்திலுள்ள பாடசாலைகளை நடத்தி செல்ல முடியும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதை தவிர, பிரதான நகரங்களிலுள்ள ஏனைய பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை, எதிர்வரும் ஜூலை மாதம் 10ம் திகதிக்கு பின்னர் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 10ம் திகதிக்கு பின்னர் எரிபொருள் மற்றும் எரிவாயு ஆகியவற்றை முறையாக விநியோகிக்கும் திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார்.

குறுகிய தூர பயணங்களை மேற்கொள்வதற்கான பொது போக்குவரத்து சேவைகளை, அரச பேருந்துகளை பயன்படுத்தி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து சேவையை பெரும்பாலும் இடைநிறுத்துவதற்கு ஏற்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிக்கின்றார்.

சுற்றுலாத்துறை மற்றும் ஏற்றுமதி துறை ஆகியவற்றை, கையிருப்பில் காணப்படுகின்ற எரிபொருளை கொண்டு, முன்னெடுத்து செல்லவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நாட்டு மக்கள் இன்று பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

அவசர நோய் நிலைமைகளின் போது என்ன செய்வது?

இதையடுத்து, தமது வீடுகளிலுள்ளவர்கள் அல்லது அயலவர்களுக்கு ஏதேனும் அவசர நோய் நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில், அவர்களின் உயிரை காப்பாற்றும் வகையில் செயற்பட முடியாத நிலைமையை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

அவசர நோய் நிலைமையை எதிர்கொள்ளும் நோயாளி ஒருவரை, விரைவில் மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்வதில் தற்போது பாரிய சவால் எதிர்நோக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, உரிய நேரத்தில் மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாமையினால், பிறந்து இரண்டு நாளேயான சிசுவொன்று பதுளை மாவட்டத்தில் உயிரிழந்திருந்தது.

அதேபோன்று, நிகவரெட்டிய பகுதியில் கடந்த இரு தினங்களுக்கு முன்னர், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, கர்ப்பிணித் தாய் ஒருவர், தனது சிசுவை, வீட்டிலேயே ஈன்றெடுத்த சம்பவமொன்றும் பதிவாகியிருந்தது.

கடந்த காலங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் இவ்வாறான பாதிப்புக்களை எதிர்நோக்கி மக்கள், இன்று முழுமையாகவே எரி பொருளை பெற்றுக்கொள்ள முடியாத துர்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசர தேவைகளின் போது என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் சுகாதார அமைச்சிடம், வினவியபோது,

நாடு முழுவதும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள, இந்திய உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அவசர ஆம்புலன்ஸ் சேவையை, அவசர நிலைமைகளின் போது பயன்படுத்த முடியும் என சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகமும், ஊடகப் பேச்சாளருமான ஹேமந்த ஹேரத் தெரிவிக்கின்றார்.

இந்த ஆம்புலன்ஸ் சேவையானது, நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையினால், மக்கள் தமக்கான பொலிஸ் அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியை அடையாளம் கண்டு, அதற்கான முன் ஆயத்த திட்டங்களை செய்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், அவசர நோய் நிலைமைகள் ஏற்படும் போது, உதவிகளை வழங்கும் வகையில், தமது பிரதேசங்களில் அவசர தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தும் வகையில், வாகனமொன்றை தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு, சுகாதார தரப்பினர், பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றனர்.


அவசர நோய் நிலைமைகளின் போது, 1990 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொண்டு இலவச ஆம்புலன்ஸ் சேவையை பயன்படுத்திக் கொள்ளுமாறு சுகாதார துறையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

பொலிஸ் நிலையமொன்றில் ஒரு ஆம்புலன்ஸ் மாத்திரமே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையினால், அவசர தேவைகளின் போது, பொலிஸார் தமது வாகனங்களில் உதவிகளை செய்ய தயாராக இருக்கின்றார்களா என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட போலீஸ் அத்தியட்சர் நிஹால் தல்துவவிடம் வினவியது.

"பொலிஸ் அதிகாரிகள், மக்கள் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலேயே எரிபொருளை பெற்றுக்கொள்கின்றனர். பொலிஸாருக்கும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கான தேவை தற்போது காணப்படுகின்றது. எனினும், பொதுமக்களுக்காக செய்ய இயலுமான அனைத்து விதமான சேவைகளையும் அர்ப்பணிப்புடன் செய்ய நாம் தயாராகவுள்ளோம்" என நிஹால் தல்துவ தெரிவித்தார். ●


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........  ii) 18, 15, 12, ............., ...........

21) [3, 9, 14, 6, 10, 12,] பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..............................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..............................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..............................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் $3l\ 300ml$ பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..............................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



..................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

..................................................  (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி  2) இரணைமடுக்குளம்  3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்  2) உதிப்பு  3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்  2) வாளேந்திய சிங்கம்  3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976  2) 1851  3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு  2) இறப்பர், தாழம்பூ  3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6  2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130  2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455
24. 1l 100ml / 1100ml
25. ரூபாய் 144.00
26. 1) 190  2) 100  3) 290
27. 15 : 30
28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1
31. 2
32. 3
33. 2
34. 3
35. 2

### கல்வி tv CHANNEL-1 — 23.06.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 23.06.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கல்வி அமைச்சின் ஆலோசனையை கண்மூடித்தனமாக பின்பற்றுகிறது கிழக்கு மாகாண ஆளுநர், அதிகாரிகள்!

## இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**அம்பாறை, ஜுன் 30**

**சுகாதாரத்துறையினர் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள வழிமுறையொன்றைப் பின்பற்றியது போல் ஆசிரியர்களது விடயத்தில் பாராமுகமாகத் தொழிற்படும் கல்வியமைச்சின் ஆலோசனைகளை கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் அதிகாரிகள் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டியுள்ளது.**

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில்-

பரீட்சைத் திணைக்கள ஆணையாளரால் மதிப்பீட்டுப் பணிகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிக் கடிதம் வழங்கியும் எதுவும் நடைபெறவில்லை. தூர இடங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் மாத்திரமன்றி ஆசிரியர் சமூகத்தின் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் உரிமை முழுமையாக மறுக்கப்பட்டுள்ளது. இவைகளுக்கான எந்த முயற்சிகளையும மேற்கொள்ளாத அதிகாரிகள் ஆசிரியர் சமூகத்தை வதைக்கும் வகையிலான அறிவுறுத்தல்களை மாத்திரம் வெளியிடுவது சங்கடத்திற்குரியதாகும்.

பொதுப் பரீட்சைகள் மற்றும் பருவகால விடுமுறைகள் என்பவைகளுக்கு ஒரே நாட்காட்டி நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும்போது கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கென தனியான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதனால் எவ்விதமான பிரயோசனங்களும் கிடைக்கப் போவதில்லை

எரிபொருளை மையமாகக் கொண்டு குறிப்பிட்ட காலப்பகுதி வரை பாடசாலைகளை மூடுவதாக விடுக்கப்படும் அறிவித்தல் கிழக்கு மாகாணத்திலும் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அதிபர் மற்றும் அதிகாரிகளுக்கு தனியாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை வழங்குவதூன ரத்துச் செய்துவிட்டு பொதுவான கல்விப் புலத்தினர் விடுக்க வேண்டும். கைவிரல் அடையாளம் இடும் இயந்திரப் பாவனையினை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட ஆசிரியர்களைக் மாத்திரம் வரவழைத்து நடத்தப்படும் பாடசாலைகளால் மாணவர்களுக்கான முழுப் பயனைப் பெறச் சந்தர்ப்பம் இல்லை என்பதுடன் எரிபொருள் பிரச்னையால் கிழக்கு மாகாண முன்னணிப் பாடசாலைகளில் கற்கும் மாண வர்களின் வருகையும் பாதிக்கப் பட்டுள்ளது என்பதை அதிகாரி கள் உணர்ந்து கொள்ளவேண் டும். ஆசிரியர்களது இவ்வா றான கோரிக்கைகள் உடனடி யாக நிறைவேற்றப்பட வேண் டும். இல்லையேல் அடுத்த சில தினங்களில் பாடசாலை பகிஷ்கரிப்பு மற்றும் கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளோம்-என்றுள்ளது.

(அ)



# சிவப்பு அறிவித்தலை மீறியோர் மீது வழக்கு

அம்பாறை, ஜுன் 30

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி பிரிவுகளில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்து துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தும், அதனை மீறியபவர்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி மருத்துவர் எப்.எம்.ஏ. காதர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி மருத்துவர் ஐ.எல்.எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட டெங்கு ஒழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாகச் சென்று டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, அது தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

டெங்கு ஒழிப்பு பரிசோதனையின் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்து துப்புரவு செய்யுமாறு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தும், அதனை மீறியபவர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்யவுள்ளோம்.

சுற்றுப்புறத்தில் தேங்கும் நீர் நிலைகளைக் கண்டறிந்து அவற்றை வெறுமைப்படுத்துதல் அல்லது நீர் தேங்கி உள்ள அத்தகைய இடங்களில் பூச்சி கொல்லி மருந்துகளைத் தெளித்தல், உயிரியற் கட்டுப்பாட்டுக் காரணிகளை இடல் போன்றன நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுக்கின்றது.

பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கியுள்ள குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு இடம் கொடுக்காத வகையில் துப்புரவாக தமது இடங்களை வைத்து கொள்ளவேண்டும்.

தென்னம் குரும்பை, யோகட் கப், வெற்று போத்தல்கள், வெற்று ரயர்கள், பொலிதீன் கழிவுகள் போன்ற கழிவுகளை முறையாக அகற்ற வேண்டும்.

பொதுமக்கள் வாரத்தில் ஒரு நாள் தங்களது வீடுகளையும் சுற்றுப்புறச் சூழலையும் துப்பரவு செய்ய வேண்டும். டெங்கு ஒழிப்பு தொடர்பான ஆலோசனைகள் தேவைப்படும் பட்சத்தில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்-என்றார்.

(அ)

# ஆலையடிவேம்பில் ஏக்கருக்கு 15 லீற்றர் டீசல் வழங்க ஏற்பாடு

அம்பாறை, ஜுன் 30

எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மகாபோக விவசாய செய்கை அறுவடையினை பாதுகாப்புடன் மேற்கொள்வது தொடர்பிலான தீர்மானம் மேற்கொள்ளும் கூட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், அக்கரைப்பற்று கிழக்கு விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர், இராணுவ அதிகாரிகள் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது தலைமை உரை ஆற்றிய பிரதேச செயலாளர் வி.பபாகரன்-

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சுமார் 8500 ஏக்கர் வயல் நிலப்பரப்பில் விவசாய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் மாதம் முதலாம் திகதியளவில் அறுவடை ஆரம்பமாகவுள்ளது.

ஆகவே விவசாய அறுவடைக்கு தேவையான எரிபொருள் தொடர்பில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானது. இதனை கருத்தில் கொண்டு மாவட்ட செயலாளரிடம் தேவையான எரிபொருளை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளேன். அவரும் வழங்குவதாக உறுதி அளித்துள்ளார். அதற்காக முயற்சியை பிரதேச செயலாளர் எனும் அடிப்படையில் நான் முழுமையாக எடுத்துள்ளேன். அவ்வாறு கிடைத்தால் யாருக்கும் பிரச்னை இல்லை. ஆனாலும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக குறைவாகவோ அல்லது எரிபொருள் கிடைக்காமல் போனாலோ என்ன செய்வது என்பதுதான் இங்குள்ள கேள்வி.

இதற்கான தீர்வு காணப்பட வேண்டும் எனில் விவசாய பிரதிகள் ஒத்துழைப்பு அவசியம்-என்றார்.

இதன் பின் பலரது ஆலோசனைக்கு மத்தியில் கிடைக்கும் எரிபொருளில் அருகில் உள்ள பிரதேசங்களுக்கு ஏக்கருக்கு 12 லீற்றர் டீசலும் தூரப்பிரதேசங்களுக்கு ஏக்கருக்கு 12 லீற்றருடன் மேலதிகமாக 2 லீற்றர் வினியோகிப்பதற்கும் உடன்பாடு எட்டப்பட்டது.

அத்தோடு ஜுலை ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் 10ஆம் திகதி வரை அறுவடை நடைபெறும் எனவும், இக்காலத்தில் கட்டம் கட்டமாக டீசல் ரோக்கன் அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் அறுவடை காலத்தில் டீசல் தட்டுப்பாடு ஏற்பட்டால் தகவல் அடிப்படையில் தேவைக்கு அதிகமான டீசலை பதுக்கி வைத்தவர்களிடம் இருந்து அவற்றை கைப்பற்றி அறுவடைக்கு வழங்குவது எனவும் முடிவெடுக்கப்பட்டது.

(அ)

# கரைவலை மீனவரின் பிரச்னையை அமைச்சர் டக்ளஸ் தீர்க்கவேண்டும்

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் கோரிக்கை

அம்பாறை, ஜுன் 30

காரைதீவிலும் அண்டிய பிரதேசங்களிலும் கரைவலை மீன்பிடி தொழில் செய்கின்ற உறவுகளின் நீண்ட காலப் பிரச்னையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு தீர்த்து வைக்கவேண்டும் என்று அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆழி பேரலை அனர்த்தத்துக்கு பின்னர் காரைதீவிலும் அண்டிய பிரதேசங்களிலும் கரையோர கடல் பகுதிகளில் பிரமாண்டமான கற்பாறைகள் எழுந்து நிற்கின்றன. இது பாரம்பரிய கரை வலை மீனவர்களுக்கு பாரிய சவாலாக இருந்து வருகின்றது. பாறைகள் கிழித்து கரைவலைகள் அறுந்து விடுகின்றன. இதனால் கரைவலை மீனவர்களின் தொழில் மாத்திரம் அல்ல வாழ்வாதாரமும் பெரிதும் பாதிக்கப்பட்ட வண்ணம் உள்ளது. வீண் செலவுகளும் ஏற்படுகின்றன.

கரைவலை மீனவர்கள் ஏழைகள் ஆவர். இந்நிலைமை தொடருமானால் எதிர்காலத்தில் இப்பிரதேசங்களில் கரை வலை மீன் பிடி தொழில் முற்று முழுதாக இல்லாமல் போகின்ற அவலமும் கண் முன் தெரிகின்றது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகின்ற வாரங்களில் ஒலுவில் துறைமுகத்தை மீண்டும் திறந்து வைக்க வருகின்றார் என்று அறிய கிடைக்கின்றது. அப்போது அவர் காரைதீவுக்கு களவிஜயம் மேற்கொண்டு வந்து கரைவலை மீனவ உறவுகளை சந்தித்து பேச வேண்டும் என்று எமது மீனவ உறவுகள் சார்பாக கேட்டு கொள்கின்றேன். அதிநவீன தொழினுட்ப பொறிமுறை மூலமாக கற்பாறைகளை அவர் அகற்றி தர உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் விநயமாக வேண்டி கொள்கின்றேன்.- என்றார்.

(அ)



# ஜோ பைடனின் மனைவி மகளுக்கு பயணத் தடை

மொஸ்கோ, ஜூன். 30

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவி ஜில் மற்றும் மகள் ஆஷ்லே உள்ளிட்ட 25 பேர் தங்கள் நாட்டுக்கு வர ரஷ்யா தடை விதித்துள்ளது.

தங்களுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள பல்வேறு பொருளாதாரத் தடைகளுக்குப் பதிலடியாக ரஷ்யா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது தவிர, அமெரிக்காவில் தங்கள் நாட்டுக்கு எதிரான இனவாத கருத்துக்களை தூண்டுவதாகக் கூறி, 4 எம்.பி.க்களுக்கும் ரஷ்யா தடை விதித்துள்ளது.

(அ)

# இத்தாலியில் மீண்டும் உயர்கிறது கொரோனா

## நேற்று முன்தினம் 83,555 பேருக்கு தொற்று, 69 பேர் மரணம்!

றோம், ஜூன் 30

இத்தாலியில் கொவிட் தொற்று நோயாளர் தொகை அதிகரித்து வரும் நிலையில் தீவிர சிகிச்சை தேவைப்படுபவர்களின் வீதமும் அதிகரித்து வருகிறது.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இத்தாலியில் 83,555 புதிய தொற்று நோயாளர்கள் உறுதி செய்யப்பட்டதாக அந்த நாட்டு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் நாளொன்றில் பதிவான அதிக தொற்று நோயாளர் தொகை இதுவாகும்.

இதற்கிடையில் கொவிட் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையில் உள்ள நோயாளிகளின் சதவீதம் இந்த ஆண்டின் தொடக்கத்தில்




இருந்து முதல் முறையாக சடுதியாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமையுடன் முடிவடைந்த 24 மணி நேர காலப்பகுதியில் 69 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை இறப்பு எண்ணிக்கை 63 ஆக பதிவாகியிருந்தது. (அ)

# பெரும் தொற்றலை மையமாக மாறுகிறது பாரிஸ் பிராந்தியம்



பாரிஸ், ஜூன். 30

மூடிய இடங்கள் மற்றும் சனக் கூட்டம் நிறைந்த பகுதிகளில் பொது மக்கள் மீண்டும் வைரஸ் தடுப்பு மாஸ்க் அணிவதை ஊக்கப்படுத்துமாறு பிரதமர் எலிசபெத் போர்ன் பொலிஸாருக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்திருக்கிறார். சமூக இடைவெளி, கைகளைத் தூய்மையாக்குதல் போன்ற சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் விடாது பின்பற்றுமாறும் அவர் நாட்டு மக்களைக் கேட்டிருக்கிறார்.

அரசின் இந்த அறிவுரைகள் கட்டாயத்தின் பேரிலானவை அல்ல என்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டியிருக்கிறார். போக்குவரத்துகள் மற்றும் பொது இடங்களில் மாஸ்க் அணிந்திருக்கவேண்டும் என்ற கட்டாய விதி கடந்த மே மாதம் 16 ஆம் திகதியுடன் சட்டரீதியாக நீக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

நோய் எதிர்ப்பை மீறித் தொற்றுகின்ற ஒமெக்ரோன் திரிபின் புதிய உப திரிபுகள் ஐரோப்பா எங்கும் ஏழாவது தொற்றலையை உருவாக்கிவருகின்றன என்று எச்சரிக்கப்படும் பின்னணியில் பிரதமரின் இந்த அறிவிப்பு வெளியாகி இருக்கிறது.

நேற்று முன் தினம் மாலை பொதுச் சுகாதாரத் துறை விடுத்துள்ள தொற்று விவரங்களின் படி 147,248 புதிய தொற்றுக்கள் கடந்த 24மணிநேரத்தில் பதிவாகியிருப்பது நாட்டின் தொற்று நிலைமை உச்ச அளவில் எகிறிச் செல்வதைக் காட்டியிருக்கிறது.

குறிப்பாக பாரிஸ் பிராந்தியமே நாட்டில் அதி கூடிய ஒமெக்ரோன் திரிபு பரவும் பெரும் தொற்று மையமாக மாறியிருக்கிறது என்று பொதுச் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

தொற்றாளர்கள் பலரும் மறு தொற்றுக்குள்ளானவர்கள் ஆவர். தீவிரமான நோய் அறிகுறிகள் நீடிக்காத போதிலும் தொற்றுக்குள்ளான பலரும் புதுவகையான பாதிப்புகளால் அவதியுற நேர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறுபது வயதுக்கு மேற்பட்ட பிரிவினரை விரைவாக நான்காவது தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அரசு கேட்டிருக்கிறது. ஊசி ஏற்றாதவர்களுக்கு விரைவில் நினைவூட்டும் கடிதங்கள் சுகாதாரத் துறையினரால் அனுப்பி வைக்கப்படும் என்று பிரதமர் தெரிவித்திருக்கிறார். (அ)

# கொலம்பியா சிறையில் கலவரம், தீவைப்பு; 52 கைதிகள் கருகிப் பலி - 26 பேர் படுகாயம்!

பொகோட்டா, ஜூன். 30

தென்மேற்கு கொலம்பியாவில் சிறைக் கைதிகளிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து சிறைக்குத் தீவைக்கப்பட்டதில் தீயில் சிக்கி குறைந்தது 52 கைதிகள் பலியாகினர். மேலும் 26 பேர் காயமடைந்தனர் என கொலம்பியா தேசிய சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

துலுவா நகரில் உள்ள சிறைச்சாலைக்குள் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அதிகாலை 2:00 மணியளவில் கைதிகள் மெத்தைகளுக்குத் தீ வைத்தனர் என தேசிய சிறைச்சாலை மற்றும் சிறைச்சாலை நிறுவனத்தின் பணிப்பாளர் டிட்டோ காஸ்டெல்லானோஸ் கூறினார்.

தீயில் கருகி 52 பேர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. 26 பேருக்கு நாங்கள் சிகிச்சையளித்து வருகிறோம் என வாலே டெல் காகாவில் உள்ள சுகாதாரத் துறையின் தலைவர் கிறிஸ்டினா லெஸ்மெஸ் ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

காயமடைந்தவர்களின் 6 சிறைக்காவலர்கள் உட்பட பலர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கலவரம், தீவைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1,200க்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறையை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சுற்றி வளைத்தனர்.

மெத்தைகளை எரிப்பதன் மூலம், அதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை கைதிகள் கணிக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக இந்த கலவரம் மற்றும் தீவைப்பால் 52 பேர் பலியானதுடன், 26 பேர் காயமடைந்துள்ளனர் என தேசிய சிறைச்சாலை மற்றும் சிறைச்சாலை நிறுவனத்தின் பணிப்பாளர் டிட்டோ காஸ்டெல்லானோஸ் கூறினார்.

தீப்பரவலை அடுத்து சிறைச்சாலைக்கு விரைந்த தீயணைப்பு வீரர்களால் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் மாலை தடயவியல் குழுக்கள் சிறைக்குள்சென்று தீயில் கருகி இறந்தவர்களின் உடல்களை அடையாளம் காண முயன்றனர்.

சிறைக்கு வெளியே நூற்றுக்கணக்கான சிறைக் கைதிகளின் குடும்பத்தினர் தங்கள் அன்புக்குரியவர்களை பற்றிய தகவல்களை அறிய நேற்று முன்தினம் முழுவதும் காத்திருந்தனர்.

ஒரு கட்டடத்தில்



அடைக்கப்பட்டிருந்த கைதிகள் முதலில் மெத்தைகளை எரித்திருக்கலாம். இதனைத் தொடர்ந்து அந்த வளாகம் முழுவதும் தீ பரவி இருக்கலாம் என முதற்கட்ட விசாரணைகளை தொடர்ந்து தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தப்பிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்த சம்பவம் நடந்ததா? என்பது குறித்து விசாரணைகளின் பின்னரே கருத்து வெளியிட முடியும் என கொலம்பிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(அ)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வை அறிவித்தார் மோர்கன்!



லண்டன், ஜூன் 30

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார் இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் வெள்ளைப்பந்து அணிகளின் தலைவர் இயன் மோர்கன். கடந்த சில நாட்களாக அவர் ஓய்வு பெறவுள்ளார் என்று தகவல்கள் வெளியான நிலையில், அவர் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

35 வயதான மோர்கன், அயர்லாந்து நாட்டில் பிறந்தவர். 2006ஆம் ஆண்டளவில் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அறிமுகமானார். அவர் முதன் முதலில் விளையாடிய சர்வதேச கிரிக்கெட் போட்டி அயர் லாந்து அணிக்காகதான். 2009 ஏப்ரல் வரை அயர்லாந்து அணிக்காக விளையாடி வந்தார். இதே ஆண்டின் மே மாதம் முதல் இங்கிலாந்து அணிக்காக விளையாட தொடங்கினார். அப்போது முதல் கடைசியாக நெதர்லாந்து அணிக்கு எதிராக நடந்த போட்டி வரையில் இங்கிலாந்து அணிக்காக விளையாடி வந்தார். இங்கிலாந்து அணிக்கு ஒருநாள் உலகக் கிண்ணத்தை வென்றுக் கொடுத்த அணித் தலைவர் என்று அறியப்படுகிறார் மோர்கன்.

இங்கிலாந்து அணியை சர்வதேச ஒருநாள் (126 போட்டிகளில் 76 வெற்றி) மற்றும் இருபது - 20 (72 போட்டிகளில் 42 வெற்றி) கிரிக்கெட் வடிவங்களில் அதிக போட்டிகளில் வழிநடத்திய அணித்தலைவர் என்ற சாதனைக்கு சொந்தக்காரர். அதிக வெற்றி விகிதத்தை தன்னகத்தே வைத்துள்ளவர். கிட்டத்தட்ட பத்து ஆண்டு காலம் இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பை கவனித்தவர்.

ஒருநாள் கிரிக்கெட்டில் இங்கிலாந்து அணிக்காக 225 போட்டிகளில் விளையாடி 6,957 ஓட்டங்கள் குவித்துள்ளார். 13 சதங்கள் இதில் அடங்கும். இதே போல டி20 கிரிக்கெட்டில் 115 போட்டிகள் விளையாடி 2,458 ஓட்டங்கள் எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)



## விம்பிள்டன் ரென்னிஸ் ஸ்வியாரெக் வெற்றி!

லண்டன், ஜூன் 30

இங்கிலாந்தில் நடைபெறும் விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில், உலகின் முதல்நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் முதல் சுற்றில் வெற்றி பெற்றார்.

இதில் அவர் 6-0, 6-3 என்ற செற்களில் மிக எளிதாக, குரோஷிய தகுதிச்சுற்று வீராங்கனையான ஜனா பெட்டை தோற்கடித்தார். இந்த வெற்றியின் மூலம் தொடர்ந்து 36 வெற்றிகளை பதிவு செய்திருக்கிறார் ஸ்வியாரெக். அடுத்த சுற்றில் அவர் நெதர்லாந்தின் லெஸ்லி கொர்கோவை எதிர்கொள்கிறார்.

இதர ஆட்டங்களில், போட்டித்தரவரிசையில் 4-ஆம் இடத்திலிருக்கும் ஸ்பெயினின் பௌலா படோசா 6-2, 6-1 என்ற செற்களில் அமெரிக்காவின் லூசியா சிரிகோவை வீழ்த்தினார்.



## விம்பிள்டன் ரென்னிஸ்: முதல் சுற்றிலேயே செரீனா தோல்வி!

லண்டன், ஜூன் 30

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டியில் முதல் சுற்றிலேயே பிரபல வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தோல்வியடைந்துள்ளார்.

பிரபல ரென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் ஒரு வருடத்துக்குப் பிறகு மீண்டும் போட்டிகளில் பங்கேற்கத் தொடங்கியுள்ளார். 2021 பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் செரீனா வில்லியம்ஸ், 4ஆவது சுற்றில் தோல்வியடைந்தார். பிறகு முதல் சுற்று ஆட்டத்தின்போது காயம் ஏற்பட்டதால் விம்பிள்டன் போட்டியிலிருந்து விலகினார்.

கடந்த வருட விம்பிள்டன் போட்டியில் கலந்து கொண்ட பிறகு வேறு எந்த ரென்னிஸ் போட்டியிலும் செரீனா பங்கேற்கவில்லை. தற்போது, ஒரு வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் விளையாட வந்துள்ளார்.

ஒரு வருடமாக விளையாடாமல் போனதால் தரவரிசையில் 1204 இடத்துக்கு கீழிறங்கியுள்ளார் செரீனா. விம்பிள்டன் 2022 போட்டியில் முதல் சுற்றில் தரவரிசையில் 113ஆவது இடத்தில் உள்ள பிரான்ஸின் ஹார்மனி டேன்-ஐ எதிர்கொண்டார்.

24 வயது ஹார்மனி டேன், மூன்று மணி நேரம் போராடி 7-5, 1-6, 7-6 (10-7) என்ற செற்கள் கணக்கில் செரீனாவைத் தோற்கடித்தார்.

ஏழு முறை விம்பிள்டன் பட்டங்களை வென்றுள்ள செரீனா, கடைசியாக 2016இல் விம்பிள்டள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றார். குழந்தை பிறந்த பிறகு 2018, 2019 விம்பிள்டன் போட்டிகளின் இறுதிச்சுற்று ஆட்டங்களுக்குத் தகுதியடைந்தார்.

சமீபத்திய தோல்விகளால் செரீனாவின் 24ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்துக்கான காத்திருப்பு மீண்டும் தொடர்கிறது.

இதுவரை 23 பட்டங்களை வென்றுள்ள செரீனா, இன்னும் ஒரு கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வெல்லும் பட்சத்தில் மகளிர் ரென்னிஸ் வரலாற்றில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றவரான மார்க்ரெட் கோர்ட்டின் சாதனையை சமன் செய்வார். ஆனால், அந்த ஒரு பட்டத்துக்காக மிகவும் போராடிக் கொண்டிருக்கிறார். கடைசியாக, 2017இல் அவுஸ்திரேலிய ஓப்பன் போட்டியில் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# அயர்லாந்துடனான ரி-20; இந்திய அணி த்ரில் வெற்றி!




டப்ளின், ஜூன் 30

அயர்லாந்து அணிக்கு எதிரான 2ஆவது இருபது -20 போட்டியில் 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி த்ரில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது.

அயர்லாந்துக்கு எதிரான 2ஆவது இருபது - 20 போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 227 ஓட்டங்ள் எடுத்தது.

இந்திய அணியின் சார்பில் அதிகபட்சமாக தீபக் ஹூடா 104 ஓட்டங்கள் குவித்தார்.

இதனையடுத்து, 228 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கியது அயர்லாந்து.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக போல் ஸ்ட்ரிலிங் மற்றும் அண்ட்ரூ போல் பிரினி களமிறங்கினர். இந்த இணை தொடக்கம் முதலே இந்திய அணியின் பந்து வீச்சை வெளுத்து வாங்கியது. அதிரடியாக ஆடிய இந்த ஜோடி 5 ஓவர்களில் 60 ஓட்டங்களை கடந்தது. சிறப்பாக விளையாடிய போல் இந்த இணையை ரவி பிஷ்னோய் தனது சுழலில் விழ வைத்தார். போல்ஸ்டிரிலிங் 40 ஓட்டங்களில் ரவி பிஷ்னோய் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

அதன்பின் களமிறங்கிய கேரத் டெலானி வந்த வேகத்தில் ரன் அவுட்டாகி வெளியேறினார். பின்னர், அணித்தலைவர் அண்ட்ரூவுடன் ஜோடி சேர்ந்தார் ஹாரி டெக்டர். இந்த இணை சீரான இடைவெளியில் பௌண்ட்ரிகள் அடித்ததன் மூலம் அணியின் ஓட்ட வீதம் சரியான வேகத்தில் பயணித்தது. அதிரடியாக ஆடிய அண்ட்ரூ அரைச்சதம் கடந்தார். அவர் 37 பந்துகளில் 60 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். அதில், 3 பௌண்ட்ரிகள் மற்றும் 7 சிக்ஸர்கள் அடங்கும். ஹாரி டெக்டர் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அந்த அணியின் விக்கெட் காப்பாளர் லார்கேன் டக்கர் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற அயர்லாந்துக்கு சிக்கல் ஏற்பட்டது.

இந்த தருணத்தில் ஜோர்ஜ் டாக்ரெல் மற்றும் மார்க் இணை அயர்லாந்தின் வெற்றிக் கனவை உயிர்ப்புடன் வைத்திருந்தது. இந்த இணை சிறப்பாக விளையாட அயர்லாந்து அணியின் ஓட்டவீதம் சீராக வெற்றிப் பாதையை நோக்கி நகர்ந்தது. கடைசி இரண்டு ஓவர்களில் அயர்லாந்து அணியின் வெற்றிக்கு 30 ஓட்டங்களுக்கும் அதிகமாக தேவைப்பட்டது. இந்த நிலையில் ஹர்ஷல் பட்டேல் வீசிய 19ஆவது ஓவரில் 14 ஓட்டங்கள் எடுக்கப்பட்டது. இதனால் இறுதி ஓவரில் அந்த அணிக்கு 17 ஓட்டங்கள் தேவை என்ற நிலை உருவானது.

இறுதி ஓவரை உம்ரன் மலிக் வீச வந்தார். இறுதி ஓவரின் இரண்டாவது பந்தை அவர் முறையற்ற பந்தாக வீசினார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அயர்லாந்து அணி தொடர்ச்சியாக இரண்டு பௌண்ட்ரிகளை அடிக்க ஆட்டத்தில் பரபரப்பு தொற்றிக் கொண்டது. கடைசி இரண்டு பந்தில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

சிறப்பாக பந்து வீசிய உம்ரன் மலிக் கடைசி இரு பந்துகளில் 2 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்தார். இதன்மூலம் இந்திய அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. மேலும், இருபது - 20 தொடரையும் 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்திய தரப்பில் புவனேஷ்குமார், உம்ரன் மலிக், ஹர்ஷல் பட்டேல் மற்றும் ரவி பிஷ்னோய் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# வங்கிகளின் சேவை நேரத்தில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 30

அரச மற்றும் தனியார் வங்கிகள் தமது சேவை நேரத்தில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளன.

எரிபொருள் நெருக்கடி காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, அரச மற்றும் தனியார் வங்கிகளில் வார நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை மாத்திரமே கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுமென சங்கத்தின் தலைவர் சன்ன திஸாநாயக்க தெரிவித்தார். (அ)

# புதிய பஸ் கட்டணத் திருத்த பரிந்துரை போக்குவரத்து அமைச்சிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 30

புதிய பஸ் கட்டண திருத்த பரிந்துரையை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சிடம் நேற்று கையளித்துள்ளது.

பஸ் கட்டணத்தை 30 சதவீதத்தால் அதிகரிப்பதற்கும், ஆகக்குறைந்த கட்டணத்தை 40 ரூபாவினால் உயர்த்தவும் இணக்கம் ஏற்பட்டிருந்ததாக அகில இலங்கை தனியார் பஸ் சங்க சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரயன்ஜித் தெரிவித்திருந்தார்.

இதனடிப்படையில், தொழிற்சங்கங்களின் குறித்த பரிந்துரைகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சிடம் கையளித்துள்ளது. (அ)

# ஜப்பானியத் தூதுவருடன் நேற்று யாழ் மாநகர முதல்வர் சந்திப்பு!

**யாழ்ப்பாணம், ஜூன் 30**

**ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி நேற்று யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனைச் சந்தித்து கலந்துரையாடினார்.யாழ்.மாநகர சபையில் நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பில் யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் உடனிருந்தார்.**

இதன்போது மாநகர முதல்வரால் ஜப்பான் தூதுவருக்கு நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது.

ஜப்பான் கடந்த காலங்களில் யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் செய்துவந்த பொருளாதார மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு யாழ். மாநகர முதல்வர் என்ற வகையிலும் மாநகர மக்கள் சார்பிலும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இலங்கையில் சமாதானம் நிலவிய காலத்தில் ஜப்பானால் சமாதான பேச்சு வார்த்தைக்கு காத்திரமான பங்களிப்பு செய்யப்பட்டமை, குறிப்பாக இலங்கைக்கான விசேட தூதுவர் யசுசி அகாஷி அந்தப் பணிகளில் ஈடுபட்டிருந்தார். அதேபோன்று தற்சமயமும் இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றுக்கு ஜப்பானிய அரசு பங்களிப்பு செய்யவேண்டும் என்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு ஜப்பான் உதவி வருகின்ற நிலையில் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முன்நிபந்தனையாக இலங்கையில் ஒரு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை இலங்கை அரசுக்கு ஜப்பானிய அரசு விடுக்க வேண்டும் என்றும் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஜப்பானிய தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள ஜப்பான் தூதுவர் சமகால நிலைமைகள் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 12 வருடத்தின் பின் விடுதலையான கைதிக்கு 55 இலட்சம் ரூபா இழப்பீடு!

கொழும்பு, ஜூன் 30

12 வருடங்களின் பின்னர் நிரபராதி என்று விடுதலையான கைதிக்கு நட்டஈடு வழங்கக் கோரி அரசுக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவால் மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து 55 இலட்சம் ரூபா இழப்பீடு அரச தரப்பால் வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கைதிக்கு நட்டஈடு வழங்கப்பட்ட முதல் வழக்கு இதுவாகும்.

கொழும்பு-8, பொரளை பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக இரகசியமாக இயக்கப்பட்ட புலனாய்வுப் பிரிவில் புலனாய்வு அதிகாரியாகச் சேவையாற்றி வந்த துர்யலாகே தர்மதாச 2007ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட அரச புலனாய்வுத்துறை அதிகாரியை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை நடத்திய பின்னர் அவருக்கு எதிராக ஆர்.டி.எக்ஸ் 23 கிராம் தனி உடைமையில் வைத்திருந்தமை, 35 துப்பாக்கி ரவைகள் மற்றும் 8 சயனைட் வில்லைகளை தனி உடைமையில் வைத்திருந்தமை மற்றும் பாதுகாப்பு இரகசியங்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் உளவுத் துறைக்கு வழங்கியமை என மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச் சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

12 வருடங்களாக நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் அரச தரப்பினதும், எதிராளி தர்மதாச சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசாவினதும் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டிஆராச்சி, தனது தீர்ப்பில் எதிராளி தரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு எதிராளி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரச தரப்பு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்க தவறியுள்ளமையால் எதிராளியான முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியை 2019ஆம் ஆண்டு விடுதலை செய்து அறிவித்தார்.

2019ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட தர்மதாச சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா பொலிஸ்மா அதிபர், களனி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொஷான் டயஸ், சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு அரசமைப்பின் 17 மற்றும் 126 ஆம் உறுப்புரைகளுக்கு அமைய உயர்நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், “சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சிறுநீரகப் பிரச்னையால் பாதிக்கப்பட்டிருந்த தர்மதாச சிறுநீரகக் கோளாறால் அவஸ்தைப்பட்டுள்ளார். ஆனால், அதனைச் சிறை அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. சிகிச்சை அளிக்காமல் கைதியை நோயில் துடிக்க விடுவது கூட கோரமான சித்திரவதைதான். விளக்கமறியலில் இருந்தபோது தர்மதாச அடிக்கடி சுகவீனம் அடைந்துள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டிருந்த போது உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையாலேயே அவரின் நோய் தீவிர நிலைமைக்குச் சென்றுள்ளது. இப்போது அவரின் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து இரத்தச் சுத்திகரிப்புச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மனுதாரருக்கு உரிய சிகிச்சையும், பராமரிப்பும் வழங்கப்பட்டிருந்தால் இவ்வாறான மோசமான நிலையை அடைந்திருக்கமாட்டார். தர்மதாசவின் இந்த நிலைக்குப் பொலிஸாரும், சிறைச்சாலை தரப்பினரும், சட்டமா அதிபருமே காரணம். எனவே, நீதியான நிவாரணம் வேண்டும்” - என்று கோரப்பட்டிருந்தது.

அத்துடன், அந்த மனுவில் மேலும், ”ஒரு நிரபராதியான நேர்மையான பொலிஸ் உத்தியோகத்தரை 12 வருடங்கள் சிறை வைத்திருந்து அவரின் எதிர்காலத்தையே இருளாக மாற்றிவிட்டது அரசு. தர்மதாச குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்ட போதும் அவரை மீளவும் பொலிஸ் பதவியில் அமர்த்தவோ நஷ்டஈடு வழங்கவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அவர் சிறையில் இருந்த போது மாமியாரின் ஓய்வூதியப் பணமே தர்மதாசவின் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் வாழ்க்கையைக் கொண்டு செல்ல உதவியது. தர்மதாச விடுவிக்கப்பட்ட பின்னரும்கூட பொலிஸ் வேலை மீளக் கிடைக்காமையால் தொடந்தும் அவரது குடும்பம் மாமியாரின் ஓய்வூதியப் பணத்தையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்கவேண்டிய அவலம் தொடர்கின்றது” - என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், தர்மதாச 2021ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் மரணமடைந்ததையடுத்து தர்மதாசவின் மனைவியான சந்தியா தமயந்தி மனுதாரராக பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு உயர்நீதிமன்றில் விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருக்கையில், இம்மாதம் 24ஆம் திகதியிடப்பட்டு தர்மதாசவின் மனைவிக்கு 55 இலட்சத்து 23 ஆயிரத்து 808 ரூபாவுக்கான காசோலை அரச தரப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# மேலும் மூன்று மாவட்டங்களில் ஒரு நாள் கடவுச்சீட்டு சேவை!

கொழும்பு, ஜூன் 30

ஒரு நாள் சேவையின் ஊடாக கடவுச்சீட்டு வழங்கும் செயற்பாடுகள் மேலும் 3 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மாத்தறை, கண்டி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஒருநாள் கடவுச்சீட்டு வழங்கல் சேவைகள் முன்னெடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மைய நாட்களாக, பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் பிரதான அலுவலகத்துக்கு நாளாந்தம் பெருமளவானோர் வருகைதந்தனர்.

இதன்காரணமாக இரண்டு சேவை முறைகளின் கீழ் ஒரு நாள் கடவுச்சீட்டு வழங்கல் சேவையை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போதைய எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் மேலும் 3 மாவட்டங்களில் கடவுச்சீட்டு சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. (அ)

# ஜுலை 10 வரை 10 வீதமான தனியார் பஸ்கள் இயங்கும்!

கொழும்பு, ஜூன் 30

ஜூலை 10ஆம் திகதி வரை 10 சதவீத தனியார் பஸ்கள் மட்டுமே இயக்கப்படும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக இரண்டு நாட்களுக்கு ஒரு முறை பஸ்களை இயக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்றார். (அ)

# கட்டுப்பெத்த சந்தியில் நேற்று துப்பாக்கிச் சூடு!

## இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 30

மொரட்டுவை - கட்டுபெத்த சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, சுமார் ஒரு மாத காலப்பகுதியில் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் 10 மரணங்கள் பதிவாகியுள்ளன. (அ)

## ரயில் சேவை...

ரயில் சேவைகள் இரத்தானமையால் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் காத்திருந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். அத்துடன் பல்வேறு சிரமங்களுக்கும் முகம் கொடுத்திருந்தனர். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

கும் ஒருநாள் சேவையை எதிர்வரும் திங்கட்கிழமை முதல், வவுனியா, கண்டி, மாத்தறை மாவட்டங்களில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கிளை அலுவலகங்களில் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் நேற்றுத் தெரிவித்தார்.

மேலும், திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இலங்கையில் மேலும் ஐந்து கிளை அலுவலகங்களைத் திறக்க உத்தேசித்துள்ளேன். அலுவலகங்களை திறக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

விலைமனுக்கோரல்களை அழைப்பதற்கு ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேல் செல்லும் என்பதால் எனது சொந்தப் நிதியைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் முதலாவது கடவுச்சீட்டு அலுவலகக் கிளையை திறக்கவுள்ளேன்.

எஞ்சியுள்ள அலுவலகங்களைத் திறப்பதற்கு நன்கொடைகளைப் பெறுவது அல்லது அதற்காக தனது சொந்த நிதியைப் பயன்படுத்துவது குறித்து ஆராய்ந்து வருகிறேன் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கந்தகாடு...

மணியளவில், புனர்வாழ்வு நிலையத்தின் பாதுகாப்புக்கு இருந்த பொலிஸார், இராணுவத்தினர் மீது கலவரக்காரர்கள் கற்களை வீசித் தாக்கிவிட்டு பாதுகாப்பு வேலிகளை உடைத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். 600 பேர் வரையானவர்கள் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இதேவேளை, கலவரக்காரர்கள் இறந்தவரின் உடல் அருகே காவலர்களையோ, படையினரையோ அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், உயிரிழந்தவர் 36 வயது நபர் என்றும், கொழும்பு - முகத்துவாரம் (மோதர) பகுதியை சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இராணுவம் - பொலிஸார் இணைந்து தப்பியோடியவர்களை தேடி வருகின்றனர். தப்பியோடியவர்களில் நேற்று மாலை வரை 200 பேர் வரையானவர்கள் பிடிக்கப்பட்டு மீளவும் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

தப்பியோடியவர்களை தேடும்பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் தொடர்ந்து வருகின்றனர். தவிர, அந்தப் பகுதிகளில் பலத்த பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## ஜப்பான்...

ஈழநாடு - டான் தொலைக்காட்சி குழுமத்தின் தலைவர் எஸ். எஸ். குகநாதன்.

இருநாள் பயணமாக யாழ்ப்பாணம் வந்த இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் எச். ஈ. மிஷூகோஷி நேற்று ஈழநாடு - டான் தொலைக்காட்சி பணிமனைக்கும் வருகை தந்தார். இதன்போதே டான் குழும தலைவர் மேற்படி வேண்டுகோளை முன்வைத்தார்.

அத்துடன், தற்போதைய சூழ்நிலையில் ஜப்பான் தூதுவரின் வருகை வடக்கு இளைஞர்கள் மத்தியில் ஜப்பான் நாடு தொடர்பான விழிப்புணர்வு வடக்கு இளைஞர்கள் மத்தியில் அவசியம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஜப்பான் நாட்டின் தொழில் முயற்சிகள், தொழில்முறைமைகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் குறித்து வடக்கு இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம் வடக்கு இளைஞர்கள் தொழில் நிமித்தம் செல்வதற்கான சூழ்நிலை உருவாகும் என்றும் கூறினார். (ஐ-3)

# மக்கள் பிரச்னைகளை தீர்க்காத திணைக்களங்கள்மீது நடவடிக்கை!

## வடக்கு ஆளுநர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரால் வடக்கு மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பில் இதுவரை தீர்வுகள் முன்வைக்காத அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இனியும் பொறுமை காக்க மாட்டேன் - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா.

நேற்றுப் புதன்கிழமை ஆளுநர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்தில் பொதுமக்கள் சேவையை அமைச்சர்கள் மாற்றும் திணைக்களங்கள் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும். அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் பொதுமக்கள் தமது தேவையை திருப்திகரமாக பெற்றுக் கொள்ளாமை மற்றும் அமைச்சுக்கள் திணைக்களங்களில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் தான்றோன்றித்தனமான செயல்பாடுகள் தொடர்பிலும் என்னிடம் பல முறைப்பாடுகள் நேரடியாக கிடைக்கப்பெற்றன.

அவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சிலவற்றுக்கு இதுவரை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்காமை தொடரில் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அரச சுற்று நிருபங்களுக்கு அமைவாக முறைப்பாடு வழங்கும் நபர் ஒருவருக்கு உரிய காலப் பகுதியில் தீர்வை முன்வைக்க வேண்டியது பொறப்பு வாய்ந்த அதிகாரிகளின் கடமையாகும். அரச நிர்வாகம் பொது மக்களின் தேவைகளை இலகுபடுத்துவதற்காக கட்டியமைக்கப்பட்ட ஸ்தாபன அமைப்பாக காணப்படுகின்ற நிலையில் அதன் ஊடாக பொதுமக்களின் தேவைகள் நிறைவேற்றப்படும்போதே குறித்த ஸ்தாபனம் மக்களின் நம்பிக்கையை வென்றதாக அமையும்.

வட மாகாணத்தில் செயல்பாடின்றி மக்களை சிரமத்துக்கு உள்ளாக்கும் எந்த ஒரு நிர்வாக கட்டமைப்பையும் ஆளுநர் என்ற ரீதியில் அனுமதிக்கப் போவதில்லை. ஆகவே, வடக்கு மாகாணத்தில் இதுவரை அமைச்சுகள் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் தீர்வு முன் வைக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டேன் - என்றார். (ஐ)

## ஜூலை 22...

குறிப்பிட்டார்.

இதற்கிடையில், டீசல் ஏற்றுமதிக்கான முன்பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவை ஜூலை இரண்டாவது வாரத்தில் நாட்டை வந்தடையும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் தற்போது 11,000 மெற்றிக் தொன் டீசல், 5,000 மெற்றிக் தொன் பெற்றோல், 30,000 மெற்றிக் தொன் உலை எண்ணெய் மற்றும் 800 மெற்றிக் தொன் விமானத்திற்கான எரிபொருள் இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஜூலை 10 ஆம் திகதி வரை நாட்டில் அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருள் வழங்கப்படுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (அ)

## சர்வதேச...

கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் தொழில்கட்சியின் ஸ்டீபன் மோர்கன் எம். பி. ‘இலங்கையில் தமிழ் சமூகத்துக்கு எதிரான மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்துவதற்கு தங்களின் துறை என்ன நடவடிக்கை எடுக்கிறது?”, என்று அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே விக்கி போர்ட் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “பாதுகாப்பு சபையின் ஆதவை பெறுவதில் தோல்வி அல்லது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தினால் சர்வதேச நீதிமன்றத்தில் பொறுப்புக்கூறச் செய்யும் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் ”, என்று இதன்போது அமைச்சர் எழுத்துபூர்வமாக பதிலளித்துள்ளார்.

அத்துடன், “இலங்கையில் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்காக பல ஆண்டுகளாக கோர் குழுவிலுள்ள எங்கள் பங்காளிகளுடன் பல ஆண்டுகளாக சர்வதேச முயற்சிகளை எடுத்துள்ளோம்.

“2021 மார்ச் 23இல் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் 46/1 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. இது மனித உரிமைகள் மீதான சர்வதேச ஈடுபாட்டுக்கான தொடர்ச்சியான கட்டமைப்பை வழங்குகிறது.

“மனித உரிமைகளில் முன்னேற்றம் காணுவமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுப்பதுடன், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கும் விரிவான பொறுப்புக்கூறல செயல்முறையின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறோம்.

“தெற்காசியாவின் இராஜாங்க அமைச்சர் விம்பிள்டன் பிரபு (தாரிக்) அஹமட் ஜனவரி 2022இல் இலங்கைக்கு சென்றார். அவர் வடக்கு, கிழக்கு, கொழும்புக்கு சென்று தமிழ் பிரதிநிதிகள் உட்பட சிவில் குழுக்களை சந்தித்து கலந்துரையாடினார். நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வழங்க இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்”, என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

# 24 நாட்களின் பின்னரே பெற்றோல் கப்பல் வரும்!

## பிரதமர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

எதிர்வரும் 24 நாட்களின் பின்னரே பெற்றோல் தாங்கிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடையும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடக பிரதானிகளுடன் கொழும்பில் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நாட்களில் டீசல் தாங்கிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடையவுள்ளது. இதன்மூலம், 38 ஆயிரம் தொன் டீசல் நாட்டை வந்தடையும். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் 11 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலே கையிருப்பில் உள்ளது.

அத்துடன் 5 ஆயிரம் மெற்றிக் தொனுக்கும் குறைவான பெற்றோலே கையிருப்பில் உள்ளது. இந்நிலையில், 35 ஆயிரத்து 300 மெற்றிக் தொன் கப்பல் எதிர்வரும் ஜூலை 22ஆம் திகதி நாட்டை வந்தடையும் என்றும் கூறினார். (ஐ)

# மரத்திலிருந்து தவறிவீழ்ந்து சீவல் தொழிலாளி மரணம்!

கிளிநொச்சி, ஜூன் 30

பனை மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலோப்பளை கிழக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், 4 பிள்ளைகளின் தந்தையான ஞானபிரகாசம் அமலதாஸ் (வயது-56) என்பவரே உயிரிழந்தவராவார்

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சீவல் தொழிலாளியான குறித்த நபர் தொழிலுக்கு சென்று நீண்டநேரமாக வீடு திரும்பாத நிலையில், அவரின் மனைவி அவரைத் தேடிச் சென்றுள்ளார்.

பனை மரத்தின் கீழ் விழுந்து கிடந்த அவரைக் கண்டார். இதைத் தொடர்ந்து மீட்கப்பட்ட அவர் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# நந்தலாலின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளுக்கு நீடிப்பு!



கொழும்பு, ஜூன் 30

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் பதவி காலம் மேலும் 6 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவின் பதவி காலத்தை நீடிக்குமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க பரிந்துரைத்திருந்தார்.

நிதியமைச்சர் என்ற வகையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்த விடயம் தொடர்பிலான கடிதம் ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இந்தநிலையில், குறித்த கோரிக்கையினை ஏற்றுள்ள ஜனாதிபதி எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 6 வருடங்களுக்கு அவரின் பதவி காலத்தை நீடித்துள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




# சங்கானை பிரதேச செயலகத்தின் கிராம அலுவலர்கள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 30

சங்கானை பிரதேச செயலகத் தின் 25 கிராம அலுவலர்கள் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் தங்களுக்கு எரிபொருள் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என கோரி நேற்றுக் காலை சங்கானை பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதன்போது அரசு அலுவலர் களை அவமதிக்காதே! பெற்றோல் மாபியாக்கள் ஒழிக! கிராம அலுவலர்கள் புறக்கணிக்கப்படுவது நியாயமா! தங்களின் பொறுமையை சோதிக்கவேண்டாம்! கிராம அலுவலர்கள் அத்தியாவசிய சேவையில் உள்ளடங்கவில்லையா! அரச அதிபரின் உத்தரவை மீறு வது சரியா! கிராம அலுவலர்கள் புறக்கணிக்கப்படுவது ஏன்! சங் கானை எம்.பி.சி.எஸ் எரிபொருள் நிரப்பு நிலையம் யாருடைய கட்டுப்பாட்டில்? கொரோனா முடக்க காலத்தில் மட்டும் நாம் தேவை இப்போது இல்லையா? இந்த பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட கிராம அலுவலர் சங்கத்தின் தலைவர் கணேசலிங்கம்-

கிராம அலுவலர் பிரிவு என்பது ஒரு அத்தியாவசிய சேவையாக காணப்படுகின்றது. கொரோனா உட்பட அனைத்து நெருக்கடியான காலங்களில் உங்களுடைய பங்க ளிப்பு அளப்பரியது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

எங்கள் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒரே ஒரு எரிபொருள் நிரப்பு நிலையம் மட்டுமே காணப்படுகின்றது. அந்த எரிபொருள் நிரப்பு நிலையம் பிர தேச செயலகத்தின் கட்டுப்பாட்டுக் குள் இயங்கவேண்டும் என மாவட்ட செயலாளரால் தெரிவிக்கப்பட் டாலும் இற்றைவரை ரௌடிகளா லும் மாபியாக்களாலும் ஆளப் பட்டு எரிபொருள் பெறப்படுகின்றதே அவ்விடத்துக்கு பணியாற்ற சென்ற நமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மீது கூட தகாத வார்த்தைப் பிரயோ கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எங்களுக்கு இது பாரிய சிரம மான நிலை ஒன்றை ஏற்படுத்தி யுள்ளது. குறிப்பாக 25 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிட்டத் தட்ட ஆறு உத்தியோகத்தர்களுக்கு மேல் பதில் கடமை ஆற்றுகின்றார்கள்.

ஆகவே தமக்குரிய எரிபொருள் சீராக கிடைக்கப் பெறாது விடின் இனிவரும் காலங்களில் உங்களு டைய கிராம அலுவலர் சங்கத் தோடு சமுர்த்தி மற்றும் ஏனைய அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கங்களையும் இணைத்து வீதிக்கிறங்கி போராட வேண்டிய நிலை ஏற்படும்-என்றார். (அ)

# உலர் உணவுப் பொதிகள் திருமலையில் விநியோகம்



திருமலை, ஜூன் 30

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மனையாவெளி பகுதியில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த உலர் உணவு பொருட்களை நேற்று முன் தினம் திருகோணமலை புளூ வோட்டர் கழகம் ஏற்பாட்டில் அதன் தலைவர் ஆ.ஜெயசீலன் தலைமையில் வழங்கப்பட்டது.

அரிசி, சீனி, மா போன்ற அத்தியவசியப் பொருட்கள் அடங்கிய தலா 3000 ரூபா பெறுமதியான 40 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக பாதிக்கப்பட்ட தினக்கூலி தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்வெட்டு நேரம் நீடிப்பு?

கொழும்பு, ஜூன் 30

எரிபொருள் இறக்குமதியை தாமதப்படுத்தினால் எதிர்காலத்தில் மின்வெட்டு காலம் நீடிக்கப்படும் அபாயம் உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அடுத்த ஒரு வாரத்துக்கு மூன்று மணித்தியால மின் வெட்டை தொடர்ந்து அமுல்படுத்துவதற்கு இலங்கை மின்சார சபையிடம் போதிய எரிபொருள் இருப்பு உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, உத்தேச மின் கட்டண திருத்தம் பொதுமக்களின் ஆலோசனைக்காக பகிரங்கப்படுத்தப் படும். பொதுமக்கள் நேற்று முன் தினம் முதல் 21 நாட்களுக்குள் ஆணைக்குழுவிடம் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ)




## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 09 - 1932



மறைவு 27 - 06 - 2022

### திருமதி இராசமணி இராசரத்தினம்

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா London ஐ வதிவிடமாகவும் கொண்ட இராசமணி இராசரத்தினம் அவர்கள் 27.06.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு உத்தமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முத்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற முத்தையா இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற சுபத்திரா, ஆனந்தி, சிவபாலன், வசந்தி, ஜெயந்தி, காலஞ்சென்ற லலிந்தி, சித்திரா ஆகியோரின் அன்புத் தாயாரும், குணபாலசிங்கம், சந்திரமூர்த்தி, நளினி, பிரகலாதன், காலஞ்சென்ற சிதம்பரநாதன், லக்ஸ்மன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான அன்னபூரணம், கிருஷ்ணபிள்ளை, மார்க்கண்டு, மனோன்மணி, நல்லம்மா, அன்னலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தனமணி அமிர்தலிங்கம் அவர்களின் அன்பு மைத்துனியும், நளினி ஜீவகன், வித்யா நிசாந்தன், ஜெனிவன் பைரவி, ரஜீன் வேணுகா, Dr.சுஜீன் சிவானந்தி, Dr.லலீஸ் Dr.கார்த்தி காயினி, சிவானி, நிலானி, கோபிகா, கௌரிகா, மயூரிகா, தன்யா, கோபிகன் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும்,அனிக்கா, மகிழ்யா, மகதி, ரீஷா, அனிஷா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு
Friday, 01 Jul 2022 4:00 PM - 7:00 PM
The Heartfelt Funeral Company 132 Snakes Ln E, Woodford, Woodford Green IG8 7HZ, United Kingdom

கிரியை
Sunday, 03 Jul 2022 7:00 AM
Old Parkonians Association The Pavilion, Oakfield Playing Fields, Forest Rd, Ilford IG6 3HD, United Kingdom

தகனம்
Sunday, 03 Jul 2022 10:00 AM
City of London Cemetery & Crematorium Aldersbrook Rd, London E12 5DQ, UK

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஆனந்தி - மகள்**

தொடர்புகளுக்கு:
**ஆனந்தி - மகள்** Mobile : +447910781010
**சிவபாலன் - மகன்** Mobile : +33664124593
**வசந்தி - மகள்** Mobile : +33652012190
**சித்திரா - மகள்** Mobile : +447445453487

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 12 - 1954



மறைவு 27 - 06 - 2022

### முத்துக்குமாரு கிருபானந்தா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Hayes ஐ வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு கிருபானந்தா அவர்கள் 27.06.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு சிவகாமசுந்தரி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை மங்கையர்கரசி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பத்மாவதி (கௌரி) அவர்களின் அன்புக் கணவரும், யோகானந்தா, காலஞ்சென்ற நித்தியானந்தா மற்றும் பிரம்மானந்தா, ஸ்ரீகாயத்ரி, உருத்திரானந்தா, கோவிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுப்ரமணியம் மற்றும் தனபாலசந்திரன், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் பாலசரஸ்வதி, பாக்கியராசா, கமலாவதி, விமலாவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு
Wednesday, 29 Jun 2022 1:00 PM - 3:00 PM
Friday, 01 Jul 2022 4:00 PM - 6:00 PM
Angel Funeral Directors 267 Allenby Rd, Southall UB1 2HB, United Kingdom

கிரியை
Sunday, 03 Jul 2022 10:00 AM
Home 19 Weymouth Rd, Hayes UB4 8NE, UK

தகனம்
Sunday, 03 Jul 2022 3:30 PM - 4:30 PM
Hendon crematorium Holders Hill Rd, London NW7 1ND, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பத்மாவதி - மனைவி**
**ஸ்ரீதரன் - மருமகன்**

தொடர்புகளுக்கு:
**பத்மாவதி - மனைவி** Mobile : +442088456755
**குணம் - மச்சான்** Mobile : +447746767277
**ஸ்ரீதரன் - மருமகன்** Mobile : +447800884645

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.